# காசிக்குப் போகும் சம்சாரி




ஒரு பயணக் கட்டுரை

மு.தயாநிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசிக்குப் போகும் சம்சாரி



ஒரு பயணக் கட்டுரை

மு. தயாநிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kasikkup Pokum Samsari

This book describes a traveller's experience of Hinduism in the Indian holy city of Kasi or Banaras .

Author : M.Thayanithy

First edition 4 December 2016.

Printed at K.S. Printers, Adyar, Chennai – 600020. India.
Tel 91 44 24418182, 91 9840337565

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

முன்னுரை

இந்தியப்பயணம்

திருவண்ணாமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

திரை கடல் ஓடியும் திரவியம் தேடுவது தமிழர் மரபு. திரவியம் தேடும் முயற்சியில் உலகெங்கும் தமிழர்கள் பரந்து சென்று வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். கடவுள் வழிபாடும் தமிழர் வாழ்வோடு பின்னிப் பிணைந்தது என்றால் அது மிகையாகாது. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றவர் ஔவை மூதாட்டி. இந்தப் பழமொழியை அவுஸ்திரேலியாவாழ் தமிழர்கள் நன்றாகவே விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். 1970களில் புலம் பெயர்ந்த தமிழர்கள், சிட்னியிலும் மற்ற நகரங்களிலும், பல கோயில்களைக் கட்டிவைத்துள்ளார்கள். இக்கோயில்கள், 1992ல் நான் குடும்பத்தினருடன் சிட்னிக்கு இடம் பெயர்ந்த போது, எங்கள் கடவுள் வழிபாடுகள் குறைவின்றி நடைபெற பெரிதும் உதவின. சிட்னியில் சிவன், திருமால், முருகன், பிள்ளையார், துர்க்கை போன்ற திருமேனிகளுக்குக் கோயில்கள் இருக்கின்றபடியால், எந்த கோயிலுக்குச் செல்வது என்ற மனப்போராட்டம் எங்களுக்கு எழுவதுண்டு.

பொதுவாக, தமிழ் நாட்டில் குல தெய்வ வழிபாடு உண்டு. இலங்கைத் தமிழரைப் பொறுத்த வரையில் குல தெய்வ வழிபாடு என்பது வாழ்வில் ஓர் அங்கமாக இருக்கவில்லை. இலங்கையில் நான் பிறந்து வளர்ந்த இடங்களில், திருமாலுக்கும் பிள்ளையாருக்கும் கோயில்கள் இருந்தபடியால் என் வாழ்வில் பெருமாள், மற்றும் பிள்யைார் வழிபாடுகள் இன்றியமையாததாக ஆகிவிட்டன.

என் அப்பாவின் சொந்த ஊர் பொன்னாலை. இந்த ஊர் இருப்பது பற்றி இலங்கை வாழ் மக்கள் 1975 வரை அவ்வளவாக அறிந்திருக்கவில்லை. அந்த ஆண்டு, முன்னாள் யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா பொன்னாலை வரதராஜர் ஆலயத்திற்கு வழிபட வந்த போது சுடப்பட்டு இறந்தார். அந்த செய்தி பத்திரிகைகளில் வந்த பின்தான், இவ்வூரைப் பற்றியும், இங்குள்ள வரதராஜர் ஆலயத்தைப் பற்றியும் இலங்கை மக்கள் அறிந்து கொண்டனர்.

<u>இக்கோயிலைப் பற்றிய சில குறிப்புகள்:</u>

இங்குள்ள வரதராஜப் பெருமாள் கோவில் மிகவும் பழமை வாய்ந்தது. இக் கோயிலைப் பற்றிய வரலாறு, தக்சண கைலாச மான்மியத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: பொன்னாலைக் கடற்கரையில், ஒரு மீனவனின் வலையில் ஆமையொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகப்பட்டதாம். அந்த வலையை அவனால் இழுக்க முடியவில்லை. அவன் ஊருக்குள் சென்று உதவிக்கு அயலவர்களை அழைத்து வந்து பார்த்த போது, அந்த ஆமை கல்லாக மாறியிருந்தது. அதனைக் கண்டு வியப்படைந்த ஊர் மக்கள், அந்த ஆமையைத் திருமாலின் அவதாரம் எனக்கருதி அவ்விடத்தில் பெருமாளுக்கு ஓர் ஆலயம் அமைத்தனர் என்பது தல வரலாறு.



பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில்

பொன்னாலை வரதராஜர் கோவில் போர்த்துக்கீசர் இலங்கையில் ஆட்சி செய்தபோது இடிக்கபட்டு, அதன் கருங் கற்கள் சங்கானையில் போர்த்துக்கீசரின் கோட்டை கட்டப் பாவிக்கபட்டது. இதற்காக பொன்னாலையில் இருந்து சங்கானை வரை 5.கி.மீ மக்கள் வரிசையாக நிறுத்தப்பட்டு, ஒவ்வொரு கல்லாக கொண்டு சென்றார்கள் என்று அறிகின்றோம்.

இந்தக் கோட்டை மட்டுமல்லாமல், யாழ்ப்பாணக் கோட்டையும் போர்த்துக்கீசரால் கட்டப்பட்டிருந்தாலும், இவை டச்சுக்கோட்டைகள் என்றே அழைக்கப்படுகின்றன. இவ்வூரில் பெரிய குளம், சின்னக்குளம் என இரண்டு குளங்கள் இருக்கின்றன. பொதுவாக, யாழ் குடாநாட்டில் இவை போன்று நீர்ப்பாசனத்திற்காகக் குளங்கள் கட்டப்படவில்லை. பொன்னாலையில் நீர்ப்பாசனத்திற்காகக் கட்டப்பட்ட குளங்கள், கடல் நீர் உள் வருவதையும் தடுக்கின்றன. இதனால் குளத்தையொட்டியுள்ள கிணறுகளில் நல்ல தண்ணீர் கிடைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கானை டச்சுக் கோட்டை

சின்னக்குளத்திற்கு முன்னால் சித்தி விநாயகர் ஆலயம் இருக்கின்றது. இவ்வாலயம் வரதராஜர் ஆலயத்தின் ஏழாவது வீதியில் அமைக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும், அப்படியான வீதிகள் தற்சமயம் இல்லை. இவ்வாலயத்திற்கென்று ஓர் அழகான நந்தவனம் இருக்கின்றது. இந்த நந்தவனத்தில், காசித் தும்பை, ரோஜா, நந்தியாவட்டம், மல்லிகை, முல்லை, அலரி, வீபூதிப் பச்சை, செங்கழுநீர் தொட்டி, பவள மல்லி, சூரிய காந்தி, சாமந்தி, துளசி மற்றும் மருக்கொழுந்து போன்றவை உள்ளன. குளமும், அதையொட்டியுள்ள பச்சைப் பசேலென்ற வயல்களும், வயல்களில் விளையும் நெற்கதிர்களை உண்ணவரும் பறவைக் கூட்டங்களும் இந்த ஊருக்கு அழகூட்டுகின்றன.

பொன்னாலைக் கோவிலின் ஆண்டுத் திருவிழாவின் போது தினமும் இரவில் கூத்து நடைபெறும். திருமாலின் அவதாரங்களில் ஒன்றான கிருஷ்ணனின் மகிமை பற்றி விளக்கும் மகாபாரதக் காட்சிகள் அடங்கிய கூத்துக்கள் இரவு 10 மணி தொடக்கம் விடியற்காலை 3மணி வரை நடைபெறும். திருமால் உள் வீதி வலம் வந்து, வெளி வீதி சுற்றி, கூத்து மேடைக்கு முன்புறம் வந்ததும் கூத்து ஆரம்பமாகும். இதில் பங்கு பெறுபவர்களுக்கு அழகு மற்றும் நடிப்பாற்றல் மட்டுமன்றி, நன்றாகப் பாடும் திறமையும் வேண்டும். அவர்களின் இனிமையான பாட்டுக்களைக் கேட்டுக்கொண்டே சிறுவர்களாகிய நாம் நித்திரை கொண்டு விடுவது வழக்கம். இந்த அனுபவத்தால் மகாபாரதக் கதைகள் என் மனதில் இன்று வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமாகப் பதிந்துள்ளன. அந்த நடிகர்களின் முகங்களும், அவர்கள் பாடிய பாடல்களின் வரிகளும், இன்னும் என் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளன.

பொன்னாலைக் கோவிலில் தேர்த் திருவிழாவன்று நடைபெறும் உறியடி நிகழ்ச்சி மிகவும் சுவாரஸ்யமானது. உயரத்தில் உள்ள ஒரு கப்பியில் தொங்கும் கயிற்றில் பால், அல்லது தயிர் நிரம்பிய மண் பானை தொங்க விடப்பட்டு, கயிற்றின் மற்ற முனையை ஒருவர் மேலும் கீழும் இழுத்துக் கொண்டிருப்பார். அதை ஓடிவந்து தடி கொண்டு உடைப்பது போட்டியின் இலக்காகும். இப் போட்டியில், அடியின் பலமும் பால் மற்றும் தயிர் சிதறும் தூரமும், மக்களால் ரசிக்கப்படுவன.

பொன்னாலைக் கோவிலின் தீர்த்தத் திருவிழா திருவடி நிலை என்ற கடற்கரையில் நடைபெறும். இக் கடற்கரை, பொன்னாலைக் கிராமத்திலிருந்து கீரிமலை செல்லும் கடற்கரைப் பாதையில் சுமார் 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கி.மு 3ம் நூற்றாண்டில் அசோகச் சக்கரவர்த்தியின் பிள்ளைகளான மகிந்தனும், சங்கமித்தையும், புத்தமதத்தை இலங்கையில் பரப்புவதற்காக இந்தக் கடற்கரையில் வந்து இறங்கினார்கள் என்று சரித்திரம் மூலமாக அறிகின்றோம். இவர்கள் கொண்டு வந்த வெள்ளரசு மரங்கள் அனுராதபுரத்திலும் பொலன்னறுவையிலும் நாட்டப்பட்டதாக மகாவம்சம் கூறுகின்றது. இலங்கை அரசாங்கம் போர் முடிவடைந்த அண்மைக் காலங்களில், இவ்விடத்தில் சங்கமித்தைக்குப் படகுடன் சிலை வைத்து ஒரு நினைவாலயம் அமைத்துள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாலையிலிருந்து கீரிமலைக்குச் செல்லும் கடற்கரைப் பாதையில் ஒரு பௌத்த விகாரையும் உண்டு.

இனி இந்தக் கட்டுரை எழுத என்னைத் தூண்டிய காரணத்தையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

சிட்னிக்குக் குடிபெயர்ந்தபின் சிலவருடங்களுக்கு முன் ஒரு நாள் சிவராத்திரியன்று குடும்பத்தினரோடு திருமால்-சிவன் கோயிலுக்கு போவதென்று முடிவெடுத்தோம். எங்கள் வீட்டிலிருந்து ஒரு மணித்தியாலப் பயணம். ஹெலன்ஸ்பேர்க் (Helensberg) என்னும் இடத்தில் உள்ள அந்தக் கோயிலுக்குப் போகும் வழியெங்கும் அவுஸ்திரேலிய நாட்டுக்குரிய தாவர வகைகளான, இயுகலிப்டஸ் மற்றும் ரூனா ஒஸ்ரலிஸ் போன்ற மரங்களும், தாவர வகைகளும், வான் நோக்கி வளர்ந்து அழகூட்டுகின்றன. பஞ்சவர்ண கிளிகளும் மைனாப் பறவைகளும் கூட்டம் கூட்டமாகப் பறந்து திரிவது கண்கொள்ளா காட்சி.

இது மாதிரியான பிரயாணங்கள் எல்லோருக்கும் மகிழ்வூட்டுவன. நான் இதைப் பிரயாணம் என்று குறிப்பிடுவது ஏனெனில், அதுபோன்ற ஆயத்தங்களுடன் தான் எங்களின் பயணம் தொடங்கும். எந்தவித அவசரங்கள் நேரக்கெடு ஏதுமின்றி மிகவும் ஆறுதலாகப் பேசவும் பல விடயங்களைப் பரிமாறிக்கொள்ளவும் முடியும். பல விதமான விடயங்களைப் பேசிக்கொண்டும், விவாதித்துக் கொண்டும் செல்வோம். அந்தப் பயணங்களின் போது, விடலைப் பருவத்தில் இருந்த என் பிள்ளைகள் கேட்ட கேள்விகள் மிகவும் வித்தியாசமானதாகவும், ரசிக்கக் கூடியதாகவும் இருந்தன. சில கேள்விகளுக்கு என் மனைவியும் நானும் பதில் சொல்லத் தெரியாமல் தடுமாறினோம்.

அதற்குப் பல காரணங்கள் உண்டு. பொதுவாக எங்களைப் போன்ற பேபி பூமர்கள் (Baby Boomers) எனப்படும் தலை முறையினர் பெற்றோர் சொல்லுக்கு மறுபேச்சுப் பேசாமல் வீட்டிலும், கோயில்களிலும், கடவுள் வழிபாடு செய்வோம். ஆனால் மேற்கத்திய கலாசாரத்தில் பிறந்து வளரும் எம் பிள்ளைகள் சரியான ஆதாரம் இல்லாமல் ஒன்றையும் ஏற்கமாட்டார்கள். குறிப்பாக கடவுள் நம்பிக்கை போன்ற விடயங்களில் அவர்களுக்குப் பல கேள்விகள் உண்டு. அவர்களுக்குப் பதில் சொல்லத் தெரியாமல் தடுமாறும் போதுதான் எங்கள் அறிவின் இலட்சணமும், ஆழமும் புரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கோவில்களுக்கு ஏன் செல்ல வேண்டும்? வீட்டிலிருந்து கடவுளை வழிபட முடியாதா?

- இந்துக்களின் கடவுள் யார்? சிவனா; திருமாலா; முருகனா; பிள்ளையாரா; காளியா; துர்க்கையா?

- கிறிஸ்தவர்களுக்கு பைபிள் போல், இந்துக்களின் சமய நூல் எது? கீதையா; தேவாரங்களா; ஆழ்வார் பாசுரங்களா?

- மற்றைய சமயங்கள் போலல்லாமல் எமது சமயத்தில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் பிறந்தவர்களே கடவுளுக்குப் பூசாரிகளாக முடியும். இது ஏன்?

- சாதி முறைகளை யார் உருவாக்கியது?

நான் பிறந்து வளர்ந்தது ஒரு சைவக் குடும்பத்தில் என்றபடியால் இப்படியான கேள்விகளுக்கு இடமில்லை. மேலும் நான் பிறந்து வளர்ந்த வீட்டில், 63 நாயன்மாருக்கு ஒரு மடாலயம் உண்டு. இந்த மடத்தில் ஒரு பிள்ளையார் சிலையும் உண்டு. ஒவ்வொரு நாளும் காலையில் பிள்ளையாருக்குப் பூஜை நடைபெறும். இதற்காக ஓர் அர்ச்சகர் நியமிக்கப்பட்டிருந்தார். ஒவ்வொரு மாதமும் ஏதாவது ஒரு நாயனாரின் குரு பூஜை நடைபெறும். பெரிய புராணத்திலிருந்து அந்த நாயனாரின் வரலாறு பாடப்பட்டு, அதன் பொருளும் சொல்லப்படும். இதைக் கேட்பதற்கும் பூஜை முடிவில் வழங்கப்படும் பிரசாதத்தை உண்ணவும் சிலர் வருவார்கள். அந்நாட்களில் மின்சாரம் இல்லாதபடியால் பெற்றோமாக்ஸ் விளக்கு மடாலயத்தில் தொங்கவிடப்பட்டிருக்கும். விரும்பியோ விரும்பாமலோ நாயன்மார்களின் வரலாறுகளைப் பல தடவை கேட்டிருப்பேன். மற்றொரு காரணம், குரு பூசை முடிவில் கிடைக்கும் சர்க்கரைப் பொங்கலும், கடலை வடையும் எல்லோராலும் விரும்பி உண்ணப் படுவது. நாள்தோறும் மாலையில் பிள்ளையாருக்கு விளக்கேற்றி சிறுவர்கள் எல்லோரும் தேவாரம் பாடுவோம்.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் 1960 களில் யாழ்ப்பாணம் வரும் போதெல்லாம் எங்கள் வீட்டில் தங்குவதுண்டு. அந்நாட்களில் அவர் கதாகாலட்சேபம் செய்யச் செல்லும் இடங்களுக்கு அவருடன் சென்று இதிகாசங்களையும், புராணங்களையும் கேட்கும் பெரும்பேறு பெற்றேன். வாரியாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகள் சொல்லும் பாங்கும், கணீரென்ற குரல் வளமும், சங்கீத ஞானமும், யாரையும் ஈர்க்கும். சிறுவனாக இருந்த என் மனதில் இது பெரியதோர் தாக்கத்தை உண்டாக்கியது. இப்படியான சைவக் குடும்ப சூழ்நிலையில் வளர்ந்த எனக்கே, பிள்ளைகள் கேட்ட கேள்விகளுக்குச் சரியாகப் பதில் சொல்லத் தெரியவில்லை. இதற்கு எங்கள் வளர்ப்பு முறையும் ஒரு காரணம். எங்கள் நாட்டில் கல்வி கற்பிற்கும் முறையும் மற்றோர் காரணம் என்று நினைக்கின்றேன். எதையும் சரியாகவும், பொருள் விளங்கியும், அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும் என்பதை எங்களுக்குப் பள்ளிக்கூடத்திலோ, அல்லது வீட்டிலோ, யாரும் சொல்லித்தரவில்லை. எங்கள் பெற்றோர் இப்படியான கேள்விகளுக்கும் இடமளிப்பதில்லை.

இந்து மதக் கடவுள்கள் பல. கடவுளின் பெயரால் ஏற்படுத்தப்பட்ட மூட நம்பிக்கைகளும், சமயச் சடங்குகளும் பல. உதாரணமாக, கோவிலுக்குப் போகாவிட்டால் கடவுளுக்குக் கோபம் வந்து, அதற்கான தண்டனையைக் கொடுப்பார் என்ற பயம். நம்மில் பலர், பயம் காரணமாகவே கோயிலுக்குச் செல்கின்றோம். மூட நம்பிக்கைகளைப் பின்பற்றுவதற்கும் கடவுள் பற்றிய பயமும் ஒரு காரணம். எங்கள் சமூகம், வாழ்க்கையில் நல்ல வழியில் போவதற்கும், நல்ல வழியில் சிந்திப்பதற்கும், இப் பயம் ஓரளவு உதவி செய்தது எனக் கூறலாம்.

கோயில்களுக்கு ஏன் போகவேண்டும் என்ற கேள்வி மிகவும் முக்கியமானது. கோவில்களுக்கு ஏன் செல்ல வேண்டும் என்பதற்கு ஒரு விளக்கம் உண்டு. உதாரணமாக நாம் மின் காந்த (Electro-magnetic waves) அலைகளைக் கண்ணால் காணமுடியாது. அதனால் அவை இல்லை என்று பொருள் கொள்ள முடியாது. தொலைக்காட்சியில் இருக்கும் உள்வாங்கி (Receiver) மூலம் பெறப்பட்டு சரியான அலைவரிசையை தேர்வு செய்யும் போது (tuning), இம் மின் காந்த அலைகள் திரையில் பிம்பமாக தெரியும். இது போன்று கடவுளை ஒருவரும் நேரில் காணமுடியாது. தியானமூலம் மனதை ஒரு வழிப்படுத்தி, நீண்ட காலம் பயிற்சி செய்வது மூலம் கடவளைக் காணமுடியும் என்பதை ஞானிகளின் வரலாற்றிலிருந்து அறிகின்றோம். இது பற்றி பின்னர் விவரிக்கின்றேன்.

கோயில்கள் இக்காலத் தொழில் நுட்ப உலகத்தின் WI-FI போன்றவை. கோயிலுக்குப் போவதன் மூலம் கடவுளுடன் தொடர்பு கொள்ள வேண்டிய இணைப்புக் கிடைக்கும். அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகும்போது நாம் அறியாமல் எம்மைச் சூழ்ந்து இருக்கும் அதிர்வலைகள் நம் மனதைப் பரவசப் படுத்தும். மனதை ஒருங்கிணைக்க உதவும். திருவண்ணாமலை, திருக்கேதீஸ்வரம், காசி, போன்ற தலங்களுக்குப் போகும்போது ஏதோ ஒரு சக்தி என்னுள் செல்வது போன்று உணர்ந்திருக்கின்றேன். இதைச் சிலர் மறுக்கலாம். அது அவர்களின் உரிமை. உணர்வுகளையும் அனுபவங்களையும் சொல்லிப் புரியவைக்க முடியாது. அவை தாமாகவே உணரப்பட வேண்டியவை என்பது என் தாழ்மையான கருத்து.

பிள்ளைகள் கேட்ட கேள்விகள் எப்போதும் என் மனதைக் குடைந்த வண்ணம் இருந்தன. அவை பற்றித் தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தேன். பல நூல்களையும் ஆராய்ந்து விடை தேட முயற்சித்தேன். அடுத்த கட்டமாக இலங்கை மற்றும் இந்தியாவுக்குச் சென்று பல கோயில்களைத் தரிசிப்பதென்றும், அங்கே எங்கள் பிள்ளைகளின் கேள்விகளுக்கான பதில்களைத் தேடும் பணியில் ஈடுபடவும் முடிவு செய்தேன். குடும்பத்தினரோடு இலங்கையில் உள்ள திருக்கேதீஸ்வரம், வட மற்றும் தென் இந்தியக் கோயில்களுக்குப் பிரயாணம் செய்ய, என் மனைவியுடன் கலந்தாலோசித்து ஒரு நீண்ட திட்டம் தீட்டினேன்.

காசிக்குச் செல்வதுதான் எங்கள் பயணத்தின் முக்கியமான குறிக்கோள். அதற்குப் பல காரணங்கள் உண்டு. கிறிஸ்தவர்களுக்கு ஜெருசலமும் இஸ்லாமியர்களுக்கு மெக்காவும் இருப்பது போல் எமக்குக் காசி. பொதுவாக இலங்கை வாழ் சைவ சமயத்தினரின் குறிக்கோள் தம் வாழ் நாளில் ஒரு தடவையாவது காசிக்குச் சென்று சிவனை வழிபட்டு வரவேண்டும் என்பதாகும்.

இலங்கையில் இருந்த காலங்களில் திருக்கேதீஸ்வரம் எங்களுக்கு காசியைப் போன்று முக்கியமான கோவிலாகும். சைவ நாயன்மார்களான சம்பந்தரும், சுந்தரரும், கேதீஸ்வரத்தானைப் பாடிய தேவாரப் பாடல்கள் உண்டு. இத்தலம், நாயன்மார்களால் பாடப்பட்ட 275 தலங்களில் ஒன்றாகும்.

இலங்கை மன்னன் இராவணனின் மனைவி மண்டோதரி மாந்தையைச் சேர்ந்தவள் என்றும், அவளின் தந்தை மயன் சிவனை வழிபடுவதற்காக இக் கோயிலைக் கட்டினான் என்று ஒரு புராணக் கதை உண்டு. சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் ஈழத்துப் பூந்தேவனார் மாந்தை என்ற வர்த்தக துறைமுக நகரத்தைச் சேர்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இபின் பட்டுடா என்ற அரேபிய பிரயாணி, 1334 ADயில் மாந்தை துறைமுகத்தினூடக யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்த போது, அப்போதிருந்த ஆரியச் சக்கரவர்த்தியின் விருந்தினராகத் தங்கினார் என்று தன் பயணக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். மாந்தைத் துறைமுகத்திலிருந்து ஏராளமான முத்துக்களும், கறுவா போன்ற பண்டங்களும், பெருங்குவியலாக இந்தியாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் அனுப்பப் படுவதைக் கண்டார். அவற்றை ஏற்றிச் செல்ல நூற்றுக் கணக்கான பன்னாட்டுக் கப்பல்கள் காத்திருப்பதைக் கண்டதாகத் தன் குறிப்புகளில் பதிவு செய்துள்ளார்.

அக்காலத்தில் இலங்கையின் பிரசித்திபெற்ற துறைமுகமாகவிருந்த மாதோட்டத்தை மையமாகக் கொண்டு, வங்காளக்குடாக் கடலுக்கூடாகக் கீழைத்தேசங்களுக்குப் போகும் மரக்கலங்களும்,சீன நாடுகளிலிருந்து வரும் மரக்கலங்களும் மற்றைய துறைமுகங்களுக்குப் போக்குவரவு செய்ததாக முதலியார் இராசநாயகம் "யாழ்ப்பாணச் சரித்திரம்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அந்நாளில், இலங்கையிலிருந்து காசிக்குச் செல்பவர்கள் மன்னாரூடாக இந்தியாவுக்குக் கப்பலில் செல்வார்கள். போகும் வழியில் திருக்கேதீஸ்வரத்தில் எழுந்தருளியிருக்கும் கேதீஸ்வரத்தானை வழிபாடு செய்தபின் தங்களின் பயணத்தைத் தொடர்வார்கள்.

2003ம் ஆண்டு குடும்பத்தினருடன் இலங்கை சென்ற போது, திருக்கேதீஸ்வரம் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. நாங்கள் திருக்கேதீஸ்வரத்தைச் சென்றடைந்தபோது மத்தியானம் 1மணிக்கு மேல் ஆகிவிட்டது. அப்போது கோவிலில் புனருத்தாரணம் முடிவுற்று கும்பாபிஷேகத்திற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. கோயிலுக்கு மிக அருகில் உள்ள எங்கள் உறவினர் வீட்டிற்குச் சென்று குளித்து விட்டு கொளுத்தும் வெயிலில் கோயிலுக்கு நடந்து சென்றோம்.

அன்றைய தினம் கோயிலில் சுவாமிக்கு எண்ணை சாத்திக் கொண்டிருந்தார்கள். கோயிலின் வாசலுக்கு அருகிலுள்ள வசந்தமண்டபத்தில் நூற்றுக்கு மேற்பட்ட செம்புகளும், குடங்களும், வைக்கப்பட்டிருந்தன. இன்னுமொரு மூலையில், பல்வகைப் பூக்களும், மாலைகளும் காணப்பட்டன. பல பிராமணர்கள் சுற்றியிருந்து, மந்திரம் ஓதிக் கொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மந்திர ஒலியும், மேளச்சத்தமும், மாந்தைப் பிரதேசமெங்கும் ஒரு புது மெருகூட்டுவது போன்று எனக்குப் பட்டது. நேரே, கண்ணுக்கெட்டிய தூரம் வரையும் சட்ட விளக்குகள் பிரகாசிக்கும் காட்சியின் அழகு உள்ளத்தை கொள்ளை கொள்ளவும், சுகந்த மலர்களின் வாசைன மூக்கைத் துளைக்கவும், எல்லாம் சேர்ந்து என்னைப் பரவசப் படுத்திவிட்டன. "நமச்சிவாய வாழ்க; நாதன் தாள் வாழ்க; இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்ற சிவ புராணம், ஓதுவாரின் பண்ணிசையில், கோயில் வீதியெங்கும் ஒலித்துக் கொண்டிருந்தது.

கி.பி 7ம் நூற்றாண்டில், திருஞானசம்பந்தர் "விருது குன்றமா மேருவில்" எனத்தொடங்கும் தேவாரத்தில், "மாதோட்டம் கருத நின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே" என்றும், 8ம் நூற்றாண்டில், சுந்தரமூர்த்திநாயனார் "வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்" என்றும், புகழ்ந்து பாடியுள்ளனர். 1579ல் போர்த்துக்கீசர்களால் இக்கோயில் முற்றாக அழிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் (1822-1879) அவர்கள் 1872ல் எடுத்த முயற்சியால், இக் கோயில் திரும்பவும் பழைய இடத்திலே கட்டப்பட்டது. காசிக்குக் கங்கை நதி தீர்த்தமாடுவதற்கு இருப்பது போல், திருக்கேதீஸ்வரத்திற்குப் பாலாவித் தீர்த்தம் இருப்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பயணம்

காசி என்றும், பனாரஸ் என்றும், அழைக்கப்படும் வாரணாசி இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் உள்ள நகரமாகும். இந் நகரம், இந்தியா மற்றும் உலகெங்கும் வசிக்கும் இந்துக்களின் புனித நகரமாகக் கருதப்படுகின்றது. இதன் மகத்துவம் கருதி, இலங்கை வாழ் தமிழ் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு, விசுவநாதன், காசிலிங்கம், காசிநாதன், காசிஆனந்தன் என்றெல்லாம் பெயர் வைத்து காசியை தங்களுக்கருகே வைத்துக்கொண்டனர்.

இந்தியாவின் மாநிலங்களில் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஹரியானா, பீகார் போன்றவை இந்தியாவின் இதயப் பகுதி (Heartland) என்று குறிப்பிடப்படும் முக்கிய மாநிலங்களாகக் கருதப்படுகின்றன. இவை எல்லாம் கங்கை நதியை அண்மித்த பிரதேசங்கள் என்பதால் இந்தியாவின் அரசியல், மற்றும் மக்கள் செல்வாக்கைப் பெற்றவை. இந்தியப் பிரதமர்களில் பலர் உத்தரப் பிரதேசத்திலிருந்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நான் சிறுவனாக யாழ்ப்பாணத்தில் வசித்து வந்த காலங்களில், வீட்டில் காசியைப்பற்றிய பேச்சுக்கள் அடிக்கடி இடம்பெறுவதைக் கேட்டிருக்கிறேன். என் வீட்டில் காசிக்குச் சென்று திரும்பிய உற்றார் உறவினர்களையும், ஊரவர்களையும், மிகவும் மதிப்போடு உபசரிப்பார்கள். அவர்கள் கொண்டுவந்து தரும் விபூதிப் பிரசாதங்கள், சின்னச் செம்புகளில் அடைக்கப்பட்டிருக்கும் கங்கா தீர்த்தம், உருத்திராட்ச மாலைகள், சிவலிங்கங்கள், ஆகியவை யாருக்கும் பக்திப் பரவசமூட்டக் கூடியன. குறிப்பாகப் பிரசாதங்களிலிருந்து வெளிவரும் நறுமணங்கள், என்னை கற்பனையில் இந்தியாவுக்கே அழைத்துச்சென்றுவிடும்.

காசிக்குப் போய் வந்தவர்கள் சொல்லும் கதைகளைக் கேட்பதற்காக நாங்களெல்லாம் வீட்டு முன் விறாந்தையில் புல்லுப் பாய் விரித்து ஆவலுடன் கூடியிருப்போம். ஏனென்றால் அவர்கள் தங்கள் பயண அனுபவங்களைச் சொல்லும்போது, அவற்றில் சந்தித்த மனிதர்களும், வேடிக்கையான அல்லது விபரீதமான நிகழ்வுகளும், பல உபகதைகளும் இடம்பெற்றிருக்கும். இவற்றை எல்லாம் கேட்கும்போது, எனக்கும் காசிக்குப் போகவேண்டும் என்ற ஆவல் எழுந்ததுண்டு. ஆனால் நான் பலமுறை இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றிருந்தாலும், காசிக்குச் செல்லும் வாய்ப்பு மட்டும் கிடைக்கவில்லை, அல்லது அந்த வாய்ப்பை நான் அமைத்துக்கொள்ளவில்லை என்று கூறலாம். இதற்குப் பல காரணங்கள். குறிப்பாக இந்தியாவுக்குச் செல்லும்போது ஏற்படும் சங்டங்களைவிட, காசியில் எதிர்நோக்கும் சங்கடங்கள் மிகவும் மோசமானவை என்று கேள்விப்பட்டிருக்கின்றேன். இவை எல்லாம் என் மனதில் காசியைப் பற்றி ஒரு பயத்தை உண்டு பண்ணியிருந்தது.

முன்னெல்லாம் இலங்கையிலிருந்து காசிக்குச் செல்பவர்கள் பிரயாணத்தில் படும் அவஸ்தைகள் பற்றிச் சொல்லி மாளா. யாழ்ப்பணத்தில் இருந்து இரவு 7 மணிக்கு கொழும்பு செல்லும் மெயில் இரயிலில் ஏறினால், நடு இரவில் மதவாச்சியை இரயில் வந்தடைந்தவுடன் தலைமன்னாருக்குச் செல்லும் பெட்டிகள் கழற்றி விடப்பட்டு, மீண்டும் அம்மெயில் வண்டி கொழும்பை நோக்கிப் போய்விடும். பின்னர் கொழும்பிலிருந்து தலைமன்னாருக்குச் செல்லும் இரயில் வரும்வரை மதவாச்சி இரயில் நிலையத்தில் பிரயாணிகள் காத்திருக்கவேண்டும். அந்த மெயில் இரயிலில், பெட்டிகள் இணைக்கப்பட்டு மீண்டும் அவர்களின் பயணம் தலைமன்னாரை நோக்கி ஆரம்பமாகும். அதிகாலையில் இரயில் தலைமன்னாரை அடைந்துவிட்டால், பின்னர் அங்கிருந்து பயணிகள் கப்பல் மூலம் தனுஷ்கோடிக்குச் செல்லவேண்டும். அப்போதெல்லாம் பிரயாண ஒழுங்குகள் இலங்கை இரயில் நிலையத்திலிருந்தே செய்யக் கூடியதாக இருந்தன. பின்னர் அம்முறை 1960களில் கைவிடப்பட்டது.

அந்நாளில், இரயில் நிலையங்களில் பொதுவாகச் சாப்பாட்டு வசதிகள் மிகவும் குறைவு. இதனால் வீட்டிலிருந்து புறப்படுவதற்கு முன் புளிச்சாதம், தயிர்சாதம், பிளாஸ்க்கில் கோப்பி முதலியவற்றை எடுத்துச் செல்வார்கள். தலைமன்னாரில் இலங்கைச் சுங்கம், மற்றும் குடிவரவு - குடி அகல்வு அதிகாரிகளின் கெடுபிடிகளைச் சமாளித்துக் கப்பலில் ஏறும்போது மணி 9 ஆகிவிடும். முக்கியமாக அம்மைத்தடுப்பூசி போட்டதற்கான ஆவணங்கள், பயணத்தில் எடுத்துச் செல்லும் பொருட்கள் போன்றவற்றை மிக நுணுக்கமாகப் பரிசீலனை செய்வார்கள் என்று பலர்தம் அனுபவத்திலிருந்து கூறுவதைக் கேட்டிருக்கிருக்கின்றேன். எனது முதலாவது இந்தியப் பயணத்தில் இதை நேரில் அனுபவித்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பலில் போகும்போது பாதித்தூரம் வரை, மன்னார் கரையோரங்களும் தென்னை மரங்களும் தெரியும். பாதித்தூரம் கடந்தபின், இந்தியக் கரையோரமான தனுஷ்கோடியும், கொஞ்சம் கொஞ்சமாக இராமேஸ்வரம் ஆலயக் கோபுரமும் தெரியத் தொடங்கும். கப்பலில் செல்லும் பலர் தம் பொருட்களை இந்தியா கொண்டு செல்லும் வியாபாரிகள் அல்லது, அங்கு பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும், படிக்கச் செல்லும் மாணவர்கள்.

கப்பல் கரைக்கு வரும்போது, இலங்கையிலிருந்து வரும் பயணிகளை வரவேற்கக் கூட்டம் கூட்டமாக பிச்சைக்காரர்கள் வருவார்கள். இந்தியா வளர்ச்சியடைந்த இந்தக் காலத்தில், பிச்சைக்காரர்களைக் காண்பது மிக அரிது. பின்னர் கப்பல் தனுஷ்கோடியை அடைந்தபின் பயணிகள் இராமேஸ்வரத்தில் தீர்த்தமாடி சிவனை வழிபட்டு அங்கிருந்து காசிக்குச் செல்வார்கள். இராமேஸ்வரத்திலிருந்து காசிக்குச் செல்ல மூன்று நாட்களுக்கு மேல் இரயிலில் பயணம் செய்யவேண்டும். இப்பயணிகள் இராமேஸ்வரத்தில் பஸ் தரிப்பு நிலையம், இரயில் நிலையம் போன்றஇடங்களுக்கு குதிரை வண்டிகளில் செல்வார்கள்.

நான் சிறுவனாக (60களில்) முதன்முறையாக இந்தியாவுக்குச் சென்றபோது இப்போது இருப்பதுபோல் மூன்று சக்கர வண்டிகள் (auto rickshaws) இருக்கவில்லை. விமான மற்றும் இரயில் நிலையங்கள், பஸ் தரிப்பு நிலையங்கள் எல்லாம் குதிரை வண்டிகள் மயமாக இருக்கும். கறுப்பு, சாம்பல், வெள்ளை மற்றும், மண் நிறக்குதிரைகள் வண்டிகளை இழுத்துச் செல்லும். அந்தக் குதிரைகள் எல்லாம் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். இரயில் வண்டிகள் எல்லாம் டீசல் அல்லாமல் கரியினால் உருவாகும் நீராவியின் சக்தியால் இயங்குவதால், புகை பயணிகளின் பெட்டியினுள்ளே தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கும். பிரயாணத்தில் புகை மணமும் முகத்தில் ஒட்டும் கரியும் தவிர்க்க முடியாதவை என்று அதை அனுபவித்தவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். இந்திய இரயிலில் நான் முதல் முறையாக பயணித்த போது, எனக்கும் அந்த அனுபவம் கிடைத்தது.

இரயில் பிரயாணங்கள் செய்யும்போது இரயில் நிலையங்களில் பல்வேறு மொழிகளைப் பேசும் மனிதர்களையும், அவர்களின் உடை, நடைமுறைகளையும் காணமுடியும். இரயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டிகளில் சுத்தமான கழிவறைகள் இல்லாத காரணத்தால், இயற்கை உபாதைகளைக் கழிப்பதென்பது மிகவும் கஷ்டமான விடயம். நல்ல குடி தண்ணீர், சுகாதாரமுறையில் தயாரிக்கப்பட்ட உணவு வசதிகள் கிடைப்பதென்பது மிகவும் சாத்தியமற்ற விடயங்கள். சென்னையிலிருந்து காசி வரையான பயணத்தில் சீதோஷ்ண நிலை மாற்றங்களும் இலங்கையிலிருந்து வட இந்தியா செல்லும் பயணிகள் எதிர்நோக்கிய பிரச்சனைகளில் ஒன்றாகும்.

ஆனால் இந்நாளில், காசிப் பிரயாணம் பழைய காலத்தைப் போல் சிரமமானதல்ல. இக்காலத்தைச்சார்ந்த மிகவும் நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வசதிகளுடன் போய்வரக்கூடியதாக விருக்கின்றது. விமானம், கார் போன்ற போக்குவரத்து வசதிகளுடன், நாங்கள் பயணம் செய்யக் கூடியதாக இருக்கின்றது. கடல் கடந்து செல்ல விமானம், பல இடங்களைச் சுற்றிப் பார்க்கக் கார், முக்கியமானவர்களைத் தொடர்புகொள்ள அல்லது எங்கள் அசௌகர்யங்களை உடனுக்குடன் அறிவிக்க தொலைபேசி, செல்லுமிடங்களைப் பற்றிய தகவல்களை அறிய டப்ளட் (tablet) என்று பல சௌகரியங்களுடன் சென்றுவர முடியும். இன்றைய தலைமுறையினர் பழைய காலத்தில் பயணிகள் பயணத்தின் போது பட்ட இன்னல்களையும் இக்காலத்தில் எங்களுக்கும், எங்கள் சந்ததியினருக்கும் அமைந்திருக்கும் வசதிகளையும் கற்பனையிலாவது ஒப்பிட்டுப் பார்க்கவேண்டுமென்ற நோக்கத்தில் இவற்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். மேலும் இவ்வளவு சிரமங்களைச் சந்தித்த பின்னும், திரும்பத் திரும்ப காசிக்குச் செல்ல என் மூதாதையர் விரும்பினர் என்பதை நினைக்கும் போது எனக்கு மிகவும் பெருமையாக விருக்கின்றது.

1898ல் காசிக்குச் சென்ற மகாகவி பாரதியார், 1902ம் ஆண்டு வரை அங்கு தங்கியிருந்தார் என்று அறிகின்றோம். அந்த இளமைக் காலத்தில் காசியில் அவர் பெற்ற அனுபவம் சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம் போன்ற பல மொழிகளில் நல்ல தேர்ச்சியையும், நாட்டுப் பற்று, தமிழ் மொழிப் பற்று, மற்றும் வீரம் செறிந்த கருத்துகளையும், கவிதைகளில் இடம் பெறவைத்தது என்றால் அது மிகையாகாது. பாரதியாரின் கவிதைகள் எல்லாமே எனக்குப் பிடிக்கும். பாரதியாரின் கவிதைகளில், இந்தக் கவிதை எனக்கு மிகவும் பிடித்தது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தேடிச் சோறு நிதந்தின்று- பல
சின்னஞ்சிறுகதைகள் பேசி- மனம்
வாடித் துன்பமிக உழன்று- பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து- நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி- கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும்- பல
வேடிக்கை மனிதரைப் போலே- நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ!

யாழ்ப்பாணம் சிவயோக சுவாமிகளும் காசிக்குச் சென்று வழிபட்டிருக்கின்றார்.

காசியிலிருந்து ஓர் அன்பருக்கு யாழ்ப்பாணம் சிவயோக சுவாமிகள் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

“தேடித்திரிந்து காசிக்கு வந்து கண்டேன் விசுவநாதனை என்னுள்
வாடித் திரிந்து வருந்த வேண்டாம்
தேடிய பூண்டு காலுக்குள்ளே என்ற தெவிட்டா வாசகம் ஒன்றுண்டு”.

1888ம் ஆண்டு சுவாமி விவேகானந்தர், காசியில் பெற்ற அனுபம் பற்றியும் குறிப்பிட விரும்புகின்றேன். காசியில் சுவாமி விவேகானந்தர் நடந்து செல்லும் போது ஒரு குரங்குக் கூட்டம் அவரைத் துரத்தத் தொடங்கியது. செய்வது ஒன்றும் அறியாமல் சுவாமியும் ஓடத் தொடங்கினார். அப்போது எதிரில் வந்த சந்நியாசி ஒருவர் சுவாமியைப் பார்த்துக் கூறினார்: “ஓடாதே நில்; குரங்குகளைத் திரும்பிப் பார்”. சுவாமியும் அப்படியே செய்தார். குரங்குக் கூட்டமும் செயலற்று நின்று விட்டது. இந்த அனுபவத்தை சுவாமி விவேகானந்தர் ஒரு வாழ்கைப் பாடமாக எடுத்துக் கொண்டார். அதாவது குரங்குக் கூட்டம், வாழ்வில் நாம் எதிர் கொள்ளும் துன்பங்கள் போன்றவை. அவற்றை நாம் சந்திக்கும் போது தப்பியோட நினைக்கக் கூடாது. மன வல்லமையோடு துன்பங்களை நாம் எதிர் கொண்டால் அவை நம்மை விட்டுச் சென்றுவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவண்ணாமலை



எங்கள் காசிப் பயணத்திற்கு முன்பாக, திருவண்ணா-மலைக்குச் சென்று அண்ணாமலையாரைத் தரிசிக்க விரும்பினோம். ஆகவே சென்னை விமான நிலையத்தை அடைந்ததும், அங்கிருந்து உடனடியாகக் காரில் பயணமானோம். எங்கள் நண்பரும் காரோட்டுனருமான முரளி சென்னை விமான நிலையத்திற்கு வந்திருந்தார். மீனம்பாக்கத்திலிருந்து வேளச்சேரி வழியாக தாம்பரம் வரை அலுவலகங்களிலிருந்து மாலை வீடு திரும்புவோர், மாணவ மாணவியர் என்று சாலைகள் எங்கும் ஒரே கூட்டமாக இருந்தது. தாம்பரம் கடந்தபின் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து மறைமலை நகர் தொடக்கம் செங்கல்பட்டு, மதுராந்தகம் வரை கார் சீரான வேகத்துடன் சென்றது. விமானக் களைப்பிலிருந்து விடுபட, திண்டிவனத்தில் சாலை ஓரத்தில் அமைந்திருந்த கும்பகோணம் டிகிரி காபி நிலையத்தில் எல்லோரும் காபி அருந்தினோம். பழைய காலத்தில் இருந்தது போல் பித்தளை டபரா தம்ளர்களில் சுடச்சுட பில்டர் காபி அந்த மாலை வேளையில் மிகவும் அமிர்தமாக இருந்தது.

திருவண்ணாமலையை நெருங்க நெருங்க மலையின் தரிசனம் எங்களுக்குக் கிடைத்தது. நாங்கள் திருவண்ணாமலையை அடையும்போது இரவு 8 மணியாகிவிட்டது. எங்கள் அறைகளில் அவசரமாகப் பயணப் பெட்டிகளை வைத்துவிட்டு கீழே இருந்த சாப்பாட்டறையில் இரவு உணவை உண்டோம். மறுநாட் காலை 4 மணிக்கு எழுந்து குளித்துவிட்டு நாங்கள் கிரிவலம் செய்யத் தொடங்கினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணுதல் என்றால் நெருங்குதல் என்றும் அண்ணா என்றால் நெருங்க முடியாதவர் என்றும் பொருள். பிரம்மாவாலும் விஷ்ணுவாலும் அடியையும் முடியையும் நெருங்க முடியாத நெருப்பு மலை என்பதால் அண்ணாமலை என்று பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. கைலாயத்தில் லிங்கம் இருப்பதால் கைலாயம் சிறப்பு. ஆனால் லிங்கமே மலையாக இருப்பதால் திருவண்ணாமலைக்கு இந்த மலையே சிறப்பு என்பர். இந்த மலையையே சிவலிங்கமாகக் கருதி, சித்தர்கள், முனிவர்கள், ஞானிகள் வழிபட்டமையால் கிரிவலம் மிகவும் சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது. உலகம் தோன்றிய காலத்திலிருந்தே இம்மலை உள்ளதாகக் கூறப்படுகிறது. கிருத யுகத்தில் நெருப்பு மலையாகவும், திரேதா யுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபர யுகத்தில் பொன் மலையாகவும் கலி யுகத்தில் கல் மலையாகவும் இருப்பதாக ஐதீகம்.

திருவண்ணாமலைக் கோயிலில், அண்ணாமலையார் அக்னி வடிவில் காட்சியளிக்கின்றார். திருவண்ணாமலையின் மூர்த்தியாகிய அருணாசலேஸ்வரரின் புகழை சம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர் அருளிய திருமுறைகளில் காணலாம்.

உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரள்
மழலைமுழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ண மறுமே.

சம்பந்தர் - 7ம் நூற்றாண்டு

மாணிக்கவாசக சுவாமிகள் (9ம் நூற்றாண்டு) திருவண்ணாமலைக்கு வந்து பல காலம் தங்கியிருந்து, திருவெம்பாவை 20 பாடல்களையும் திருவம்மானைப் பதிகங்களையும் அருளிச் செய்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணாளும் தேவர்க்கு மேலான வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தென்பாண்டி நாட்டானைப்
பெண்ணாறும் பாகனை பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல் காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணாமலையானைப் பாடுங்கால் அம்மானாய்.

மாணிக்கவாசகர்- 9ம் நூற்றாண்டு.

மாணிக்கவாசகருக்குக் கிரிவலப் பாதையில் அடியண்ணாமலை என்னும் இடத்தில் ஒரு கோயில் இருக்கின்றது.

திருவண்ணாமலைக் கோவிலுக்குள் எங்கள் பாதங்கள் தரையில் படும்போது இந்த மகான்கள் எல்லாம் வலம் வந்த கோயில் பிரகாரங்களில் நாங்களும் நடக்கின்றோம் என்ற உணர்வு, எங்களை மிகவும் பரவசமாக்கியது. இவ்வாலயம் சோழ, பாண்டிய, களப்பிரர், பல்லவர்கள் ஆட்சிக் காலங்களில் புனரமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

நாங்கள் கிரிவலம் தொடங்குமுன் உயர்ந்தெழுந்த கோபுரத்தைத் தரிசித்தோம். கி.பி. 1516ம் ஆண்டு விஜய நகரையாண்ட மன்னன் கிருஷ்ணதேவராயர் கோயில் வளர்ச்சிக்காக பல திருப்பணிகளை மேற்கொண்டார். குறிப்பாக 217 அடி உயரமான திருவண்ணாமலை ராஜகோபுரம், இந்தியாவில் உள்ள கோபுரங்களின் உயரத்தின் அடிப்படையில் இரண்டாம் இடத்தைப் பிடிக்கின்றது. இந்தக் கோபுரத்திலிருந்துதான் அருணகிரிநாத சுவாமிகள் விழுந்து தன்னுயிரை மாய்க்க முயற்சித்ததாகவும் அவரை இறைவன் தாங்கிக்கொண்டதாகவும் வரலாறுகள் கூறுகின்றன. கிரிவலம் செல்லும்போது எங்களைப்போல் பலர் அந்த அதிகாலை வேளையில் வந்திருப்பதைக் கண்டோம். அவர்களில் பலர் மேற்கத்தைய நாடுகளைச் சேர்ந்தவர்கள். கிரிவலப் பாதையில் எட்டுத்திசைகளிலும் ஒவ்வொரு லிங்கங்களுக்கான கோயில்கள் உள்ளன. இவை இந்திரலிங்கம், அக்னிலிங்கம், எமலிங்கம், நிருதிலிங்கம், வருணலிங்கம், வாயுலிங்கம், குபேரலிங்கம், ஈசானலிங்கம் ஆகியனவாகும். வலம்வரும் வழியில் அவற்றையெல்லாம் வணங்கியபின் அவ்வப்போது தேவைக்கேற்ப கோயிற் படிக்கட்டுகளில் சிறிதுநேரம் காலாற இளைப்பாறினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம் வரும்போது மலையை ஒட்டிய பக்கம் செல்லாது இடப்பக்கமாகச் செல்லவேண்டும் என்று முரளி கூறினார். இதன் காரணம் வலப்பக்கத்தில் கண்ணுக்குத் தெரியாத சித்தர்களும் முனிவர்களும் செல்வார்களாம். அவர்களுக்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்படாதவண்ணம் எங்கள் கிரிவலம் இடப்பக்கத்தில் தொடர்ந்தது. இம்மலை கீழ்த்திசையில் இருந்து பார்த்தால் ஒன்றாகத் தெரியும். இது இறைவனின் ஏகத்தைக் குறிக்கும். வலம் வரும் வழியில் இரண்டாகத் தெரியும். இது அர்த்தநாரீசுவரரையும் மேற்குத் திசையில் மூன்றாகத் தெரிவது மும்மூர்த்திகளையும் குறிக்கும் என்பர். கோயிலுக்கு உள்ளும் வெளியிலும் மலைப் பகுதியிலுமாக 360 தீர்த்தங்கள் உள்ளன. திருவண்ணாமலையில் பதிவு செய்யப்பட்ட மொத்தக் கல்வெட்டுக்களின் எண்ணிக்கை 119. இவைகளில் பெரும்பாலானவை சோழர் காலத்தைச் சேர்ந்தவை. இவற்றில் திருவிளக்கேற்றல், திருமஞ்சனம், திருநந்தவனம், திருவமுது, திருவழுச்சி, அடியார்க்கு அமுதளித்தல் முதலிய அறங்களுக்காக நிலம், பொன் கால்நடை முதலியவற்றை அளித்தமை பற்றிய தகவல்கள் செதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

திருவாரூரில் பிறந்தால் முக்தி, காசியில் இறந்தால் முக்தி, சிதம்பரத்தைத் தரிசித்தால் முக்தி, திருவண்ணாமலையை நினைத்தாலே முக்தி என்பது இந்துக்களின் நம்பிக்கை. அத்தனை சிறப்புடைய திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் அண்ணாமலையாரைத் தரிசிப்பது நாங்கள் முற்பிறவியில் செய்த புண்ணியம் என்றே நினைக்கிறேன். 14 கிலோமீட்டர் தூரத்தையும் நாங்கள் நடந்து முடிக்கும்போது காலை 8.30க்கு மேல் ஆகிவிட்டது. அதன்பின் அண்ணாமலையார் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டோம். நாங்கள் சென்றிருந்த நாள் திங்கட்கிழமையாதலால் சோமவாரம் என்ற சிறப்புடன் சிவனை வழிபட இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து பக்தகோடிகள் வந்திருந்தனர். அதுமட்டுமல்லாமல் அவர்கள் அவ்வப்போது எங்களைத் தள்ளிக்கொண்டிருந்தனர். அந்தக் கூட்டத்தோடு கூட்டமாக அண்ணாமலையாரை வழிபட நாங்களும் கோயிலின் கர்ப்பக்கிரகத்திற்கு அண்மையில் பொறுமையாக நின்றிருந்தோம். கிடைத்த சொற்ப விநாடிகளில் அமைந்த அந்தத் தரிசனத்தால் நாம் அடைந்த இன்பம் சொல்லி மாளா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அண்ணாமலையார் கோயில்

வீதிவலம் வந்து ஆயிரங்கால் மண்டபத்தில் நுழைந்த போது பலபேர் தியானத்தில் இருந்தனர். உள்ளே சென்று பாதாள லிங்கேசுவரரைத் தரிசித்தோம். ஆயிரங்கால் மண்டபம் என்னும் அமைப்பு மதுரை, சிதம்பரம், திருவண்ணாமலை, இராமேஸ்வரம், திருநெல்வேலி, ஸ்ரீரங்கம் போன்ற கோயில்களில் கட்டப் பட்டுள்ளது. இசை உலகில் பிரசித்தி பெற்ற முத்துச்சாமி தீட்சிதர் இந்த மண்டபத்தில் தன் படைப்பான கீர்த்தி அருணாசலம் என்ற கவிதையை வெளியிட்டார். இதே இடத்தில் கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு முன் பால ரமணர் தன்னை மறந்து தவம் செய்தார் என்று அறிந்தோம். அதைப்பற்றி நினைவலைகளில் இருந்த எமக்கு அங்குள்ள அர்ச்சகர் கைத்தொலைபேசியில் யாருடனோ பேசிக்கொண்டு விபூதி தந்தார். கோயில் வழிபாட்டை முடித்துக் கொண்டு ரமணாச்சிரமத்தை அடைந்தபோது காலை 11 மணிக்கு மேல் ஆகிவிட்டது.

ரமணாச்சிரமத்தில் வயோதிபர்களும், சந்நியாசிகளும், பிச்சைக்காரர்களும் வரிசையாக நின்றிருந்தனர். அவர்களுக்கெல்லாம் மதிய உணவு அன்னதானம் அளிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஆச்சிரம வளாகத்தில் குரங்குகளும், மயில்களும், நாய்களும் அங்கும் இங்கும் ஓடித்திரிந்து கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவண்ணாமலை ரமணாச்சிரமம்

உலக இச்சைகளையும் சுகபோகங்களையும் அறுத்துவிட்டு, அண்ணாமலையாரை நாடி வந்த திருச்சுழி வேங்கடராமன், ரமண மகானாக மலர்ந்தபோது உலகப் பொருட்களைத் துச்சமாக மதித்து முற்றும் துறந்த முனிவரைப்போல் காட்சியளித்தார். அவரின் தாயாரின் மறைவுக்குப் பின் அவர் தம் அன்னையின் சமாதிக்கு முன் ஒரு சிறு குடில் அமைத்துத் தங்கிவிட்டார். அந்த இடமே வளர்ந்து ரமணாச்சிரமமாகக் காட்சியளிக்கிறது.

நான் சிறுவயதில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் ஆனந்த விகடனில், திருவண்ணாமலை ஆலய தரிசனம் பற்றி பரணீதரனின் பயணக் கட்டுரைகள் வந்து கொண்டிருந்தன. அவற்றை ஆவலுடன் படிப்பேன். அந்தப் பயணக் கட்டுரைகள் என் மனதில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தின. அதன் பினனர், சர்வகலா சாலைக்குச் சென்ற பின், போல் பிரண்டன் (Paul Brunton) எழுதிய "A Search In Secret India" என்ற புத்தகத்தைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் இந்தியாவெங்கும் ஞானிகளைத் தேடித்திரிந்து கடைசியாக திருவண்ணாமலையில் ரமண மகரிஷியின் தரிசனத்தில், தன்னை இழந்தார். அதன் பின் திருவண்ணாமலையில் தங்கியிருந்து ரமணரின் போதனைகளைக் கேட்டறிந்தார். இந்திய ஞானிகளைப் பற்றித் தன் புத்தகத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"That the West has little to learn from present-day India, I shall not trouble to deny, but that we have much to learn from Indian sages of the past and from the few who lived to-day, I unhesitatingly assert. The white tourist who "does" the chief cities and historical sights and then steams away with disgust at the backward civilization of India is doubtless justified in his depreciation of it. Yet a wiser kind of tourist shall one day arise who will seek out, not crumpling ruins of useless temples, nor the marbled palaces of dissipated kings long dead, but the living sages who can reveal a wisdom untaught by our universities."



திருவண்ணாமலை ரமணாச்சிரமம் தியான மண்டபம்

நாங்கள் சென்ற சமயம் ஆச்சிரமத்துக் கோவிலில் பூஜை நடந்துகொண்டிருந்தது. பக்கத்திலுள்ள தியான மண்டபத்தில் பலர் தியானத்தில் தம்மை மறந்திருந்தனர். அவர்களில் பலர் வெளிநாட்டவர்கள். நாங்களும் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் தியானம் செய்ய முயற்சித்தோம். மனம் அங்கும் இங்கும் அலைபாய்ந்துகொண்டிருந்ததை உணரமுடிந்தது. ஆனாலும் அந்த இடத்தில் இருந்தபோது ஏதோவிதமான காந்த சக்தி எம் மனதையெல்லாம் அமைதிப்படுத்திக்கொண்டிருந்தது. நாம் பல தடவைகள் திருவண்ணாமலைக்குச் சென்று அண்ணாமலையாரை வழிபட்டிருந்தாலும் கிரிவலம் செய்தது இதுவே முதன்முறை. இதில் அதிசயம் என்னவென்றால் எங்களில் ஒருவருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக பிள்ளைகளுக்கு, மனச்சோர்வோ அல்லது உடல் சோர்வோ இன்றி மிகுந்த ஆனந்தத்துடன் சென்னைக்கு மீண்டும் பயணமானோம். அங்கிருந்து புது தில்லி சென்றோம்.

நாங்கள் பயணித்த விமானம் காசியை வந்தடைந்தபோது காலை 11 மணியிருக்கும். காசி நகரத்து விமான நிலையம் மிகவும் சிறியது.எனக்கு அது பழைய பலாலி விமான நிலையத்தை நினைவூட்டியது.

இந்தியாவில் உள்நாட்டு விமானங்களில் பயணம் செய்யும்போது இரண்டு முக்கியமான விடயங்களைத் தெரிந்திருக்க வேண்டும்.

1. பயணப் பொதிகளின் எடை ஒருவருக்கு 15 கிலோவுக்கு மேல் போகக் கூடாது. (ஆனால் பன்னாட்டு விமானங்களில் பயணம் செய்யும்போது நபருக்கு 30 கிலோ வரை அனுமதிப்பர்). ஒருவர் பன்னாட்டு விமானங்கள் மூலம் சென்னைக்கு வந்திறங்கி 30 கிலோ எடையுள்ள பயணப்பொதிகளைக் கொண்டுவந்திருந்தால், அதே பொதிகளுடன் உள்நாட்டு விமானமூலம் காசி போன்ற வேறு நதரத்திற்குச் செல்லும்போது, எடுத்துச் செல்லும் 15 கிலோ மேலதிக எடைக்கு அபராதம் கட்டவேண்டும். இந்த விதிமுறைகளை நாங்கள் முன்னம் அறிந்திருக்கவில்லை.



காசி விமான நிலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. விமான நுழைவுச் சீட்டை (Boarding pass) ஏறும்போதும் இறங்கும்போதும் பரிசீலிப்பார்கள். இதன் காரணம், விமானம் பல இடங்களில் நின்று போகும்போது குறைந்த தூரத்திற்குப் பயணச்சீட்டை வாங்கிவிட்டு, தூர இடங்களுக்குப் பலர் போகின்றார்களாம். அதைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை என்று பின்னர் அறிந்தோம். ஆகவே நாங்கள் பரிசீலனை செய்யும் அதிகாரிகளைக் குறை சொல்ல முடியாது. ஏனென்றால் பலப்பல புது மோசடிகள் நாள்தோறும் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. இதனால் பாதிப்படைவது என்னவோ எங்களைப் போன்ற அப்பாவிப் பிரயாணிகள் என்பது வருந்தத்தக்க விடயம்.

அங்கு இராஜேந்திரா என்ற பெயருடைய வடஇந்தியர் எங்களை விமான நிலையத்திலிருந்து ஹோட்டலுக்கு அழைத்துச் செல்ல வந்திருந்தார். எங்கள் பயணப் பெட்டிகளை வண்டியின் மேற்பாகத்தில் இறுகக் கட்டியபின் வண்டி ஓட்டுனர் பயணத்தைத் தொடங்கினார். நாங்கள் செல்லவேண்டிய ஹோட்டலுக்குச் செல்லும்வரை இராஜேந்திரா காசியைப் பற்றிச் சில தகவல்களைச் சொல்லிக் கொண்டு வந்தார்.

- காசிக்கு பனாரஸ், வாரணாசி என்ற மறுபெயர்கள் இருப்பினும் அதிகாரபூர்வமான பாவனையில் உள்ள பெயர் வாரணாசி என்பதாகும்.
- கங்கைளில் கலக்கும் அஸி நதியையும் வருணை நதியையும் தெற்கு மற்றும் வடக்கு எல்லைகளாக உடையதால் காசித் திருத்தலம் வாரணாசி என்ற பெயரைப் பெற்றதாம்.
- அஸி முதல் வருணை வரையிலுள்ள கங்கைக் கரையோரம் மொத்தம் 64 தீர்த்தக் கட்டங்கள் அல்லது படித்துறைகள் உள்ளன. அவற்றை காட் (Ghat) என்று குறிப்பிடுகின்றார்கள்.
- காசி, உத்தரப்பிரதேசத்தின் தலைநகரம் லக்னோவிலிருந்து தென் கிழக்கே 320 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

போகும் வழியில் சிதார் வாத்தியக் கலைஞர் பண்டிட் ரவிசங்கரின் வீட்டைப் பார்த்தோம். ரவிசங்கர் தன் வாழ்நாளில் பெரும்பகுதியை லண்டனில் கழித்தார் என்று இராஜேந்திரா குறிப்பிட்டார். காசி நகர வீதியெங்கும் ஒரே தூசும் புழுதி மண்டலமுமாகவிருந்தது. தெருவில் பாதசாரிகளும் இரு சக்கர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டிகளில் செல்லும் பயணிகளும் மூக்கை மறைத்துக் கட்டிக்கொண்டு சென்று கொண்டிருந்தனர். இதற்கு இராஜேந்திரா கொடுத்த விளக்கம் எங்களுக்குச் சிறு பதற்றத்தைக் கொடுத்தது. காசியில் கங்கை நதி பெருக்கெடுத்து ஓடுவது வழக்கம் என்றும் அப்படிப் பெருக்கெடுத்து ஓடும் வெள்ளத்தில் அள்ளப்பட்டுவரும் மணலும் சேறும் வெள்ளம் வடிந்தபின் காற்றோடு கலக்குமாம். நாங்கள் சென்ற டிசம்பர் மாதத்திற்குச் சில மாதங்களுக்கு முன் நடந்த வெள்ளப் பெருக்கின் தாக்கம் மக்களை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை நேரடியாகவே கண்டறிந்தோம். சுற்றுப்புறச் சூழலை எவ்வாறு பேணவேண்டும் என்ற விஷயத்தில் இந்தியா போன்ற வளர்ந்துவரும் நாடுகளுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் உள்ள வேறுபாட்டை இந்த ஓர் உதாரணமே நன்றாக உணரவைத்தது. அந்நகரில் வசிக்கும் மக்களின் உடல் ஆரோக்கியம் குறிப்பாக அவர்களின் சுவாசப்பையின் செயற்பாடுகள் இவ்வாறு வருடந்தோறும் ஏற்படும் வெள்ளப்பெருக்கால் எப்படிப் பாதிப்படையும் என்பதை நினைத்துப் பார்க்கும்போது மிகவும் வேதனையாகவிருந்தது.

எங்கள் கார் ஹோட்டலுக்குச் சென்றபோது அங்கிருந்த சூழ்நிலை மிகவும் வித்தியாசமாகவும் சுத்தமாகவும் இருந்தது எங்களுக்குக் கொஞ்சம் ஆறுதலைத் தந்தது. வாசலில் பாதுகாப்பு அதிகாரிகளின் பரிசோதனைகளை முடித்துக்கொண்டு, எங்கள் அறைகளுக்குச் சென்று பயணப்பெட்டிகளை வைத்துவிட்டுக் கீழே அமைந்திருந்த சாப்பாட்டறைக்குச் சாப்பிடச் சென்றோம். எங்களுக்கு களைப்பு அலைச்சல் எல்லாம் ஒன்று சேர்ந்து அகோரப் பசி. கொஞ்சம் சப்பாத்தி பருப்புக் கறி, கொஞ்சம் சோறு தயிர் என்று ஒரு மாதிரிச் சாப்பிட்டு வயிற்றை நிரப்பிக்கொண்டு அடுத்த ஓட்டத்திற்குத் தயாரானோம்.

எங்களை அழைத்துச் செல்ல கீழே அமைந்திருந்த விருந்தினர் அறையில் பர்னால் என்ற பெயருள்ள ஒரு சுற்றுலா வழிகாட்டி அமர்ந்திருந்தார். அவரிடம் நாங்கள் செல்லவேண்டிய இடங்கள் பற்றிய தகவல்கள் இருந்தன. அவர் கொடுத்த அட்டவணைப்படி முதலாவதாகச் சென்று பார்க்கவேண்டிய இடம் கங்கைக் கரையும் அதையொட்டி நடைபெறும் நிகழ்வுகளும்.

ஒவ்வொரு நாளும் மாலையில் கங்கா அன்னைக்குப் பூஜை நடைபெறும், கங்கைக் கரையிலுள்ள புனிதத் தலங்களான ஹரித்துவார், ரிஷிகேஷ் வாரணாசியில் கங்கா மாதாவுக்கு பூஜை நடைபெறும். மக்களுக்குத் தேவையான குடிநீருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்ப்பாசனத்திற்கும் மூலப்பொருளான கங்கை நதியை வணங்கி நன்றி சொல்லும் நிகழ்வே இந்த ஆரத்தியாகும். வாரணாசியில் தசஸ்வமேத (Dasaswamedha) என்ற படித்துறையில் 8 அர்ச்சகர்கள் அல்லது பண்டாக்களால் ஆரத்தி பூஜை நடைபெறுகின்றது. இங்கு பிரம்மன் 10 அசுவமேத யாகங்கள் செய்தமையால் தசஸ்வமேத என்று பெயர் பெற்றது. இந்தப் பூஜையைக் கட்டாயம் சென்று பார்க்க வேண்டும் என்று பர்னால் கூறினார்.

சூரியன் மெதுவாக மறைந்துகொண்டிருந்தான். மாலை நேரத்துக்குரிய போக்குவரத்துச் சந்தடிகள் அதிகரித்துக் கொண்டிருந்தன. தெருவெங்கும் மக்களும் வண்டிகளும் நிறைந்து நின்றன. எங்கள் பயண வழிகாட்டி பர்னால் ஆங்கிலத்தில் நாங்கள் போகப்போகும் படித்துறையைப்பற்றிச் சொல்லிக்கொண்டு வந்தார். இங்கு நாள் தோறும் மாலையில் அந்தி சாயும் வேளையில் கங்கை ஆரத்தி நடைபெறும்.நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலிலிருந்து கங்கைக் கரையை சென்றடைய 30 நிமிடங்கள் எடுத்தன.

இந்தப் படித்துறைக்குக் அருகே காரில் செல்ல முடியாது. எங்கள் கார் ஓட்டுனர் எங்களை ஓர் இடத்தில் இறக்கிவிட்டுவிட, கார் செல்லமுடியாத 500 மீட்டர் தூரத்தை நடந்து சென்று கடந்தோம். வழியெங்கும் போவோரும் வருவோருமாக ஒரே மக்கள் கூட்டம் அலைமோதியது. எங்கள் புதுமுகங்களைக் கண்டு பலர் வழிகாட்ட வேண்டுமா என்று இந்தியில் கேட்டவண்ணம் இருந்தனர். நாங்கள் படித்துறையை அடைந்தபோது மக்கள் படிகளிலும், படகுகளிலும் இருந்து பஜனைப் பாடல்களைக் கேட்டுக்கொண்டிருந்தனர். எங்களுக்கும் அருகில் அமைந்திருந்த கட்டடத்தின் மாடியில் இருந்து பார்க்கக் கூடியதாக இருக்கைகள் கிடைத்தன. எட்டு அர்ச்சகர்கள் (பண்டாக்கள்) சட்டையும் வேட்டியும் அணிந்து பூஜைக்குத் தயார் செய்துகொண்டிருந்தார்கள். சில இளைஞர்கள் ஹிந்தியில் உருக்கமாக பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தனர். அந்த மாலை வேளையில் கங்கைக் கரை ஓரத்தில் இருந்துகொண்டு பாடல்களைக் கேட்பதற்கு மிகவும் இனிமையாகவிருந்தது.

பல சீன, ஜப்பானிய, வெள்ளையர்கள் எல்லாவற்றையும் ஆர்வத்துடன் படம் பிடித்துக்கொண்டிருந்தார்கள். ஆரத்தியின் போது "கங்கா மாதாக்கி ஜே" என்ற கோஷம் வானைப் பிளந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்தப் பூசாரிகள் மிக மிக நிதானமாக, தூபம், தீபம், அலங்கார தீபம், புஷ்பம், சாமரம் போன்ற நானாவித உபசாரங்களுடன் “கங்கா” மாதாவுக்கு சிறப்பாகப் பூஜை செய்கின்றார்கள். இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும் பல நாடுகளிலிருந்து வந்த பயணிகள் அந்த இடத்தை மொய்த்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு கங்கைக் கரையில் எதிர் கொள்ளும் பிரச்சகைளும் இடர்பாடுகளும் ஓர் பொருட்டாகத் தெரியவில்லை. இத்தனை ஆர்வத்துடனும் ஆழ்ந்த நம்பிக்கையுடனும் வந்திருந்த மக்கள் வெள்ளத்தைப் பார்க்கும் போது அந்தஇடத்தின் புனிதத் தன்மையும், பெருமையையும், எம்மால் ஓரளவு உணரமுடிகின்றது.

அடுத்தநாள் காலை 4 மணிக்கெல்லாம் எழுந்து



கங்கை அன்னைக்கு வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளித்துவிட்டு கங்கையில் படகுப் பிரயாணத்திற்குத் தயாரானோம். எங்களை அழைத்துச் செல்ல பர்னால் ஹோட்டலுக்கு வந்திருந்தார். இருண்ட அந்த அதிகாலை வேளையில் படகுத்துறையில் அதிக கூட்டம் இல்லை. எங்களைப்போல் வேறு சில வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் படகு யாத்திரைக்கு வந்திருந்தனர். படகில் ஏறுமுன் சின்ன மண் கிண்ணங்களில், எண்ணை நிரப்பித் திரி வைத்துவிற்பதைக் கண்டு, நாங்களும் அவற்றை வாங்கிக் கொண்டோம்.



படகில் கங்கை நதிப் பயணம்

படகை இயக்குவதற்கு ஒரு முதியவரும் இரு இளைஞர்களும் இருந்தார்கள். நாங்கள் படகில் இருந்த மரத்தால் செய்யப்பட்ட ஆசனத்திலிருந்து கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரியும் கங்கை நதிக்கரையோரக் காட்சிகளை ரசித்த வண்ணம் பயணித்தோம். நாங்கள் வாங்கிக்கொண்டுவந்த சின்னக் கிண்ணத்தில் இருந்த திரியை ஒளியூட்டி, மலர்களுடன் கங்கை நதியில் மிதக்க விட்டோம். ஒவ்வொரு படித்துறையிலும் பலர் நீராடிக்கொண்டிருந்தனர். முக்கியமாக நாங்கள் ஆவலுடன் பார்த்தது அரிச்சந்திர மயானத்தையாகும். இங்குதான் சந்திரமதி தன் மகன் லோகிதாசனைத் தீமூட்டி எரிக்கவந்தாள் என்றும், அரிச்சந்திரன் வெட்டியானாக அங்கு வேலை செய்யும்போது அங்கு பிணத்தை எரிக்க வந்த மனைவியையும், மகனையும் பார்த்தான் என்றும், உண்மைக்குக் கிடைத்த உயர்வைத் தேவர்கள் இங்குதான் அறிந்துகொண்டார்கள் என்றும், புராணங்களில் கூறப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கங்கை நதிக்கரையில் அரிச்சந்திர மயானம்

அன்றைய தினம், அரிச்சந்திர மயானத்திலும் சில பிணங்கள் எரிந்துகொண்டிருந்தன. பாதி எரிந்த நிலையில் பிணங்களை கங்கையில் தள்ளிக்கொண்டிருந்தார்கள். அதற்கு அண்மையில் எந்த விதமான உணர்வுகளோ அருவருப்புகளோ இன்றி பலர் நீராடிக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேல் நாடுகளில் வாழும் எங்களைப் போன்றவர்களின் பார்வையில் இவை பிழையாகத் தோன்றும். நாங்கள் அங்கு பெற்ற அனுபவம் வாழ்க்கைக்கு ஒரு வித்தியாசமான பரிமாணத்தைக் காட்டியது. உங்களுக்கு வாழ்வில் ஓர் அர்த்தம் தெரிய வேண்டுமா? மன அழுத்தங்களுக்கு ஒரு வடிகால் வேண்டுமா? கங்கைக் கரைக்கு வாருங்கள் என்று உரத்துக் கத்த வேண்டும் போல் தோன்றியது.



மயானக் காட்சி

அந்தக் காலை வேளையில் படகில் பிரயாணம் செய்யும் போது மெல்லிய குளிர் காற்று எங்களைத் தழுவிச்சென்றது. வானத்தில் சிறு பறவைக் கூட்டம் வட்ட வடிவமாகப் பறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அதிகாலை சூரியோதயக் காட்சி

சென்று கொண்டிருந்தன. கிழக்குத் திசையில் கொஞ்சம் கொஞ்சமாகச் சூரியன் மேலே வந்து கொண்டிருந்ததைப் பார்த்து ஆனந்தம் அடைந்தோம். கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலம் படகில் பிரயாணம் செய்தபின் கரையை வந்தடைந்தோம்.

படகு யாத்திரையை முடித்துக்கொண்டு பக்கத்தில் இருந்த விசுவநாதர் ஆலயத்திற்கு நடந்து சென்றோம். இதுவல்லவோ என் நெடுநாளையக் கனவு. இத்திருத்தலத்தை வணங்கி மகிழவல்லவா பல ஆண்டுகள் நான் காத்திருந்தேன். இந்தியாவில் அதிகமான கோயில்கள் உள்ள நகரம் காசிதான் என்பது வரலாற்று ஆசிரியர்களின் கணிப்பு. இங்கு சுமார் 1800 கோயில்கள் இருக்கின்றன. நமது இந்து சமயம் தழைக்கவந்த ஞானிகள் பலரும் உலாவிய புனித பூமியில் நாங்களும் கால் வைக்கின்றோம் என்ற உணர்வு எனக்கு பக்திப் பரவசமூட்டியது.

காசியஸ் என்ற ஆரியர்கள் முதலில் கங்கைக் கரையில் வந்து தங்கியதால் காசி என்ற பெயர் வந்ததாகவும், இத்தலம் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. இந்த ஆலயம் பலமுறை இடிக்கப்பட்டு, அந்த இடத்தில் இஸ்லாமிய மன்னர்களால் மசூதிகள் கட்டப்பட்டன. இவர்களில் கஜனி முகம்மது, குதபுதின், ஒளரங்கசீப் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இக்கோயிலை முகலாய சக்கரவர்த்தி அக்பர் தனது வருவாய்த்துறை அமைச்சர் தோடர்மால் மூலமாகக் கட்டினார் என்றும், இதற்கான ஆலோசனைகள் தோடர்மாலின் குருவான நாராயண் பட் மூலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறப்பட்டன என்றும் கூறப்பட்டாலும், கல்வெட்டுக்களில் இதுபற்றிய தகவல் ஒன்றும் இல்லை. 7ம் நூற்றாண்டில் ஆதிசங்கரர் இந்து மதத்தைப் பரப்புவதற்கு முக்கியமான இடமாகத் தேர்வு செய்தது காசி நகரையும் இந்த விசுவநாதர் ஆலயத்தையும் ஆகும். இப்போதுள்ள ஆலயம் 18ம் நூற்றாண்டிற்குப் பிறகு அகல்யாபாய் என்னும் மகாராணியால் கட்டப்பட்டதாகும்.



காசி நகர வீதியிலுள்ள கடைகள்

கோவிலுக்குச் செல்வதற்கு மிகவும் குறுகலான (5 அடி) தெருக்களின் ஊடாக நாங்கள் நடந்து சென்றோம். காசி நகரமும், தெருக்களும் புராதன பெருமை வாய்ந்தவை. இதன் அடிப்படையில் 21ம் நூற்றாண்டின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியால் மாறியிருக்கும் மற்றைய இந்திய நகரங்கள் போல் அன்றி எந்தவிதமான மாற்றங்களுக்கும் உட்படுத்தப்படாமல் அப்படியே இருந்தன. அந்தத் தெருக்களின் இரண்டு பக்கங்களிலும் சின்னக் கடைகள் அல்லது வீடுகள் இருந்தன. அந்தச் சின்னத் தெருக்களில் மாடுகளும், பாதசாரிகளும் இரண்டு சக்கர மோட்டார் வண்டிகளில், வருவோரும் செல்வோருமாக இருந்தனர்.

அவ்வப்போது விலகி நின்று, வழிவிட்டு மாடுகள் போடும் சாணத்தையும் கடந்து, முட்டாமல் மோதாமல் செல்ல வேண்டி யிருந்தது. முக்கியமாக எங்களைப் போன்ற பாதசாரிகளைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படாமல் scooter இலும் motor cycle இலும் பலர் வேகமாகச் சென்று கொண்டிருந்தது எங்களுக்குப் பயத்தை உண்டுபண்ணியது. ஏனென்றால் இந்தியத் தெருக்களில் சாலை விதிகளோ, பாதுகாப்போ எப்போதும் கவனிக்கப் படுவதில்லை, என்பது உலகறிந்த உண்மை. விசுவநாதர் கோவிலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகாமையில் ஒரு மசூதி உள்ளமையால் கோயிலுக்குள் போவதற்கு முன் பல அதிரடி சோதனைகள் நடக்கின்றன. எங்கள் சுற்றுலா வழிகாட்டி பர்னாலின் அறிவுரைப்படி இராணுவ சோதனைகளின்போது அதிகம் பேசக்கூடாது என்று உணர்ந்தோம்.

மேலும் ஓர் உள்ளூர் அர்ச்சகரின் உதவியுடன் உள்ளே நுழைந்தால், மற்ற வழிகாட்டிகளின் இம்சைகளைத் தவிர்க்கலாம் என்று எங்களுக்குக் கூறப்பட்டபடியால் அவருடைய துணையுடன் கோவிலின் உள்ளே நுழைந்தோம். கோயில் பிரகாரங்கள் மிகவும் சேறும் சகதியுமாகவிருந்தன. உட் பிரகாரம் வழுவழுப்பான சலவைக்கல்லால் கட்டப்பட்டிருந்ததாலும் ஈரமாக இருந்ததாலும் விழுந்துவிடாமல் நடக்க முயற்சித்தோம். இதற்கிடையில் பின்னாலிருந்து பக்தர்கள் தள்ளிக்கொண்டிந்தார்கள். எனது நீண்டநாள் கனவான காசி விசுவநாதரை வணங்கவேண்டும், காலம் சென்ற என் தாய் தந்தையர், என் மாமனார், மைத்துனர் போன்றவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்க வேண்டும் என்றிருந்த நான், கோவிலின் உள்ளே சென்றதும் அவற்றையெல்லாம் மறந்து உயிரையும் என் பிள்ளைகளையும் கைப்பிடித்துக்கொண்டு வெளியே வந்தேன். ஆனாலும் அந்த ஆலயத்தில் இருந்த போது ஏதோ ஒரு மந்திர சக்தியால் கட்டுண்டது போன்ற உணர்வு இருந்ததை மறுக்க முடியாது.

விசுவநாதர் கோயில் கர்ப்பக்கிருகம் வடநாட்டுப் பாணியில் கோபுரம் உயரமாகவும் கொடியுடனும் காணப்படுகின்றது. மூலவர் விசுவநாதலிங்கம் சிறியதாக பூமி மட்டத்திலிருந்து ஒரு பள்ளத்தில் உள்ளார். பக்தகோடிகள் மண்டி போட்டுக் குனிந்து விசுவநாதரைத் தொட்டு வழிபடுகின்றனர். சிவலிங்கத்தின் தலையில் தங்க முலாம் பூசப்பட்ட தாமிரத் தகடு பொருத்தப்பட்டுள்ளது. சிவலிங்கத்தைச் சுற்றிலும் வெள்ளித் தகடுக் கட்டு அமைத்துள்ளார்கள். சிவலிங்கத்தின் மேல் ஒரு பாத்திரம் தொங்கவிட்டுள்ளார்கள். அதிலிருந்து கங்கா தீர்த்தம் சொட்டுச் சொட்டாக சிவலிங்கத்தின் மேல் விழுந்து அபிஷேகம் செய்கின்றது.

எங்களைப்போல் வரும் பக்தர்கள் பலர் சின்னச் செம்புகளில் கங்கைத் தீர்த்தம் கொண்டுவந்து அபிஷேகம் செய்கின்றார்கள். இவர்கள் தீர்த்தம் கொண்டு நுழையும் இடமெல்லாம் நீர் சிந்துவதால் கோயில் பிரகாரம் எப்போதும் ஈரமாக இருப்பதில் வியப்பில்லை. கோயிலின் பின் பக்கம் ஒரு தனி நந்தி சுவற்றைப் பார்த்தவண்ணம் உள்ளது. இதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிநந்தி. ஆதி விசுவநாதர் கோயிலிருந்த இடத்தில் மசூதி உள்ளது. இந்தக் கோவிலில் பூஜைப் பொருட்கள் கொண்டுவரும் பக்தர்கள் பூஜைகள் அனைத்தையும் செய்யலாம். அர்ச்சகரிடம் கொடுத்து பூஜை செய்யவேண்டுமென்ற அவசியமில்லை.

சிறு தொலைவில் அன்னபூரணி கோவிலும் விசாலாட்சி கோவிலும் உள்ளன. அதில் விசாலாட்சி கோவில் தென்னாட்டுப் பாணியில் உள்ளது. விசுவநாதர் மற்றும் விசாலாட்சி கோவில் பணிகளில் செட்டி நகரத்தாரின் பங்கு போற்றுதற்குரியது. விசுவநாதர் கோவில் பூஜைகள் எல்லாம் செட்டிநாட்டாரின் பங்களிப்பில் பல வருடங்களாக நடைபெறுகின்றன. தென்னிந்திய மற்றும் இலங்கைத் தமிழர்கள் தங்குவதற்காக செட்டிநாட்டு மடங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலுள்ள 12 ஜோதிர்லிங்கங்களில் காசிலிங்கமே மிகவும் சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. திருமாலுக்கு விசுவரூபம் காட்டியதால் சிவலிங்கத்திற்கு விசுவநாதர் என்ற பெயர் வந்தது என்பது புராணங்களில் குறிப்பிடப்படுகின்றது. இங்குள்ள மூலவர் மரகதத்தால் ஆனவர் என்பது தனிச் சிறப்பு.


பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம்

விசுவநாதர் ஆலய தரிசனத்தை முடித்துக்கொண்டு மீண்டும் தாஜ் ஹோட்டலுக்குத் திரும்பினோம். அவசரமாகக் காலை உணவை முடித்துக்கொண் பர்னாலின் உதவியுடன் பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். பண்டிட் மதனமோகன் மாளவியா என்ற சுதந்திரப் போராட்டத் தியாகி இந்திய மக்களின் இன ஒற்றுமைக்கும் தேசிய எழுச்சிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியறிவே மிக முக்கியமானதொன்று என்பதை உணர்ந்துகொண்டு இந்தப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவிக்க



பனாரஸ் இந்துப் பல்கலைக்கழக வளாகம்


வேண்டுமென்று எண்ணினார். 1905ம் ஆண்டு நடைபெற்ற 21வது ஆராய்ச்சி மாநாட்டில் தன் கருத்தை முன்வைத்தார். இந்தச் சமயத்தில் அன்னி பெசன்ட் (Annie Besant) என்ற அம்மையாரின் உதவியுடன் 1915ம் வருடம் இந்துப் பல்கலைக்கழகம் வாரணாசியில் கட்டி முடிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகம் 300 ஏக்கர் நிலத்தில் கட்டப்பட்டது. இதற்கான நிலத்தை அந்தாளைய அரசர் காசி நரேஷ் என்பவர் கொடையளித்தார். காசி நகரத்திற்கு 60 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள இப்பல்கலைக்கழகத்தில் 20,000க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இவர்கள் தங்குவதற்கு 60க்கு மேற்பட்ட தங்கும் விடுதிகள் உள்ளன. பல்கலைக்கழக வளாகம் ஒரு நகரம் போன்று காட்சியளிக்கின்றது.

அவ்வளாகத்தின் தெருக்கள் மிகவும் அகலமானவை. வீதியின் இருமருங்கிலும் பல்கலைக் கழகக் கட்டடங்களும், விடுதிகளும், கடைகளும் இருக்கின்றன. மேலும் அவ்வளாகத்தில் Taxi, Autostand மற்றும் பல்பொருள் அங்காடிகள் என்று பல வசதிகளும் நிறைந்திருக்கின்றன. பனாரஸ் பல்கலைக் கழகத்திற்கு 16க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து மாணவர் வந்து தங்கி கல்வி பயில்கின்றார்கள். ஆகவே வளாகம் முழுவதும் மாணவர்கள் கூட்டத்தைக் காணக் கூடியதாகவிருந்தது. நான் உயர்கல்வி கற்ற கண்டியில் உள்ள பேராதனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தோடு காசிப் பல்கலைக்கழகத்தை ஒப்பிட்டுப் பார்த்துப் பழைய நினைவுகளில் மூழ்கினேன்.



பனாரஸ் பாரத மாதா கோவில்

அடுத்ததாக பர்னால் எங்களை பாரதமாதா கோவிலுக்கு அழைத்துச் சென்றார். பாரத மாதா கோவில் என்பது **Bharath Matha Temple or Mother India Temple** என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றது. பனாரஸ் பல்கலைக் கழகத்திலிருந்து 8 கிமி தூரத்தில் இது உள்ளது. 1936ம் வருடம் சிவபிரசாத் குப்தா என்பவரால் நிதியளிக்கப்பட்டுக் கட்டப்பட்ட இந்த நிலையம் மகாத்மாகாந்தியால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்திய வரைபடத்தை முழுக்க முழுக்க Marble கற்களால் கட்டப்பட்டு மிகவும் அழகாக வடிவகைக்கப்பட்டுள்ளது. வடக்கே இமயம் தொடக்கம் தெற்கே கன்னியாகுமரி வரையில் உள்ள மலைகள், ஆறுகள், சமதளங்கள், கடற்பரப்புகள் என்ற அத்தனையும் அவற்றின் அளவுகோலுக்கு அமைய மிகவும் நேர்த்தியாக வடிவமைக்கப் பட்டிருக்கின்றன. இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு எல்லோருக்கும் இந்தியா ஒரே தாய்நாடு என்ற உணர்வுடன் மற்ற வேறுபாடுகளைக் களைந்து பாடுபட இந்தக் கோவில் அமைந்ததாகக் கூறுவார்கள்.

பாரதமாதா கோவிலின் வாசலில் ஒரு குரங்காட்டி வேடிக்கை காட்டிக்கொண்டிருந்ததை சில வெள்ளைக்காரர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். நாங்கள் அவர்களை வேடிக்கை பார்த்துவிட்டு எங்கள் ஹோட்டலுக்குத் திரும்பினோம். நாங்கள் உணவறைக்குச் சென்றபோது அங்கே கூட்டம் நிரம்பி வழிந்தது. கண்ணாடி யன்னலுக்கு அருகே இருந்த ஆசனங்களில் அமர்ந்துகொண்டு எங்கள் மதிய உணவை உண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பக்கத்திலுள்ள தோட்டத்தில் மண்டபம் அமைத்து ஒரு திருமண வரவேற்புக்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தனர். அவர்களின் உடைகளிலிருந்து அவர்கள் வடஇந்திய கிராமங்களிலிருந்தும் நகரங்களிலிருந்தும் வந்திருப்பதைக் காணக் கூடியதாகவிருந்தது. மதியபோசனத்திற்குப் பிறகு எங்கள் அறைகளுக்குச் சென்று சிறிது நேரம் ஓய்வெடுத்தோம். விடியற்காலையிலிருந்து அங்குமிங்கும் திரிந்த அலைச்சலும் களைப்புமாகவிருந்ததில் கண்களை அயரச் செய்தது. சிறிதுநேர ஓய்விற்குப் பிறகு அடுத்துச் செல்லவேண்டிய சாரநாத் என்ற இடத்திற்கு எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம்.




சாரநாத் பௌத்த ஆலயம் -புத்தபெருமானின் முதற் பேச்சு இடம் பெற்ற தலம்

காசியில் இந்துக்களின் முக்கியமான தலமான விசுவநாதர் ஆலயம் இருப்பதுபோல் பக்கத்தில் சாரநாத் என்னும் இடத்தில் பௌத்த மதத்தின் முக்கிய தலமான இசிப்பத்தான என்ற பௌத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாரநாத்தில் புத்த பெருமானின் முதற் பேச்சு இடம் பெற்ற இடத்தில் மக்கள் தியானம்

ஆலயம் இருக்கின்றது. அந்த ஆலயத்திற்குச் சென்றபோது எங்கள் அனுபவம் மிகவும் வித்தியாசமாக இருந்தது. எந்தவிதமான குப்பை கூளங்களும் இல்லாமல் அந்தத் தலம் மிகவும் சுத்தமாகவும், அமைதியாகவும் மனதிற்கு ரம்மியமாகவும் இருந்தது.

அங்கு வந்த சுற்றுப் பிரயாணிகளில் சிலர் எங்களைப் போல் சுற்றிப் பார்க்க வந்திருந்தாலும் பலர் பௌத்த மதத்தைச் சேர்ந்த பிக்குகளும் பக்தர்களுமாகவிருந்தனர். பலர் பர்மா, தாய்லாந்து, கம்போடியா, சீனா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள். சிலர் மேற்கத்தைய நாட்டைச் சேர்ந்த வெள்ளைக்காரர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தர்களிடமிருந்து இந்துக்கள் அன்று தொட்டு இன்று வரை பல விஷயங்களைக் கற்றிருந்தாலும் முக்கியமாக சுத்தம், அமைதி என்பவற்றிற்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

இந்தியாவில் காசியில் உள்ள விசுவநாதர் ஆலயத்தைவிட எனக்கு சாரநாத்தில் கூடிய அளவில் மன அமைதி கிடைத்தது. சாரநாத்தில் பலர் பிரித் ஓதிக்கொண்டும் தியானத்திலும் இருந்தார்கள். களவு, வழிப்பறி, கூட்ட நெரிசல் என்ற எந்தவிதமான இன்னல்களுமில்லாமல் மன அமைதி கிடைக்கும் இடமாகவிருந்தது. இந்த வேறுபாடுபற்றி என் மகன் கேட்ட கேள்விகளுக்கு என்னால் சரியாக விடையளிக்க முடியவில்லை. காசி விசுவநாதருக்குக் கிடைக்கும் வருமானத்தைக் கணக்கில் எடுக்கின்றபோது, சாரநாத்தில் உள்ள பௌத்த ஆலயத்திற்குக் கிடைக்கும் வருமானம் மிகவும் சொற்பமே. ஆனால் அவர்களிடம் இருக்கும் ஒழுங்குமுறையும் கட்டுப்பாடும் இந்து ஆலயங்களில் காணமுடிவதில்லையே? ஏன்??

இது பற்றி என் நண்பருடன் பேசிக்கொண்டிருந்தபோது அவருக்குக் கோபம் வந்துவிட்டது. அவரின் கருத்து, பௌத்த மதத்தை உயர்வாக மதிப்பிட்டு இந்து மதத்தை நான் வேண்டுமென்றே குறைவாக மதிப்பிடுகின்றேன் என்பதாகும். ஆனால் உண்மை அதுவல்ல.

நாங்கள் திருவண்ணாமலையில் தரிசனத்தக்குச் சென்றபோது அங்கு திரண்டு வந்திருந்த பக்தகோடிகள் ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு மூலவரின் தரிகனத்திற்காகச் சென்றுகொண்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மனதில் இருந்த ஒரே குறிக்கோள் "நான்" சுவாமியைத் தரிசிக்க வேண்டும் மற்றவர்களைப்பற்றி அக்கறைப்படத் தேவையில்லை என்ற சுயநலம் மாத்திரமே. இந்த மனப்பாங்கு கிட்டத்தட்ட படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோவில் என்ற பழமொழியை ஒத்ததாகும். என் நண்பரின் கருத்து, கூட்டம் அதிகமானால் சுத்தம், சுகாதாரம் பாதிக்கப்படும் என்பதால் நாம் இவற்றை எல்லாம் சந்தித்தே ஆக வேண்டும் என்பதாகும். ஆனால் என் அனுபவத்தின் படி யாழ்ப்பாண நல்லூர் ஆலயத்தில் எவ்வளவு கூட்டம் இருந்தாலும் கோவில் எப்போதும் சுத்தமாகவே இருப்பதைக் காணக்கூடியதாகவிருக்கும். ரிஷிகேஷ் சிவானந்தா ஆசிரமம், திருவண்ணாமலை ரமணாசிரமம் போன்றவை மிகவும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருக்கவில்லையா? ஆகவே காசி விசுவநாதர் ஆலயத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமாக சுத்தத்தையும் சுகாதாரத்தையும் பராமரிக்கப்பட வேண்டும் என்பது மறுக்க முடியாத உண்மை.

நான் இந்தக் கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் சமயத்தில் இந்தியாவின் பிரதமர் மோடி நாட்டை சுத்தம் பண்ணும் மிக முக்கியமான திட்டங்களை தொடக்கி வைத்துள்ளார்.




பௌத்த மதம் அசோகர் காலத்தில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் எங்கும் பரவி செழித்தோங்கியிருந்தது. இதே சமயத்தில் இந்து சமயம் பல்வேறு சோதனைகளைச் சந்திக்க நேர்ந்தது. பௌத்தம், சமணம் ஆகிய சமயங்கள் தமிழ் மாநிலங்களிலும் பரவத் தொடங்கியிருந்தன. கி.மு. 563 ஆண்டளவில் சக்யா என்னும் அரச குடும்பத்தைச் சேர்ந்த சுத்தோதனா என்ற அரசருக்கும் மாயா என்ற அரசிக்கும் பிள்ளையாக சித்தார்த்தர் என்ற குமரன் அவதரித்தார். சித்தார்த்த கௌதமர் இன்றைய நேபாளத்திலுள்ள கபிலவஸ்துவுக்கு அருகில் லும்பினி என்னுமிடத்தில் மே மாதம் பூரணை தினத்தில் பிறந்தார். கர்ப்பவதியாக இருந்த பொழுது ஒரு நாள் இரவு அரசி மாயாவின் கனவில் 6 தந்தங்களுடன் ஒரு யானை அவரின் வயிற்றிலிருந்து வெளியேறியதைக்கண்டார். சோதிடர்களின் கூற்றுப்படி, இவர் மகன் உலகத்தையாளும் அரசராகவிருப்பார் அல்லது உலகம் போற்றும் ஞானியாகவிருப்பார் என்பதை இது உணர்த்துவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியப்பட்டது. சித்தார்த்தர் தன் 16 வயதில் யசோதரையை மணந்தார். அவருக்கு ராகுலன் என்ற ஆண்மகன் பிறந்தான். சித்தார்த்தரின் அறிவு வளர்ச்சிக்கும் ஆன்மிக சிந்தனைக்குமாக சாக்கியமுனி என்றழைக்கப்பட்டார்.

சுத்தோதனா தன் மகன் உலகில் மக்கள் எதிர்கொள்ளும் இன்னல்களை அறியாதிருக்க தன் மைந்தனை அரண்மனைக்கு வெளியே செல்ல அனுமதிக்கவில்லை. ஒருநாள் அரசருக்குத் தெரியாமல் சித்தார்த்தர் அரண்மனைக்கு வெளியே வீதிகளில் தன் ரதத்தில் பவனி வந்தார். அதன் பின்னர் மூன்று நாட்கள் வீதிகளில் சுற்றித் திரிந்தார். முதலாம் நாள் ஒரு முதியவர் படும் இன்னல்களையும் இரண்டாம் நாள் ஓர் அங்கவீனமானவர் நோய்வாய்ப்பட்டுப் படும் துயரங்களையும் கண்டார். மூன்றாம் நாள் ஓர் இறந்தவரின் பிரேதம் தூக்கிச் செல்லப்படுவதைக் கண்டார். நான்காம் நாள் ஒரு ஞானி தன்னைச் சுற்றி யுள்ளவர்களைப் பற்றியோ உலகத்தில் நடக்கும் சம்பவங்களைப் பற்றியோ எந்தவிதமான அக்கறையும் இன்றி தியானத்தில் இருப்பதைக் கண்டார். அவருக்கு உலகில் ஒவ்வொருவரும் நாளுக்கு நாள் அடையும் வேதனைகளையும் இடர்களையும் பார்த்ததன் பலனாக ஓர் அறிவுத் தெளிவு ஏற்பட ஆரம்பித்தது. அப்போது அவருக்கு 28 வயது.

முதலில் கண்ட மூன்று காட்சிகளாலும் சித்தார்த்தரின் மனம் குழப்பமடைந்தது. அழகு மற்றும் சுகபோக வாழ்க்கை நிரந்தரமானதல்ல என்ற தெளிவை இறுதியில் கண்ட துறவியின் முகத்தில் தெரிந்த அமைதி அவருக்குக் கொடுத்தது. இதனால் மனித வாழ்வில் எதிர் கொள்ளும் பிறப்பு, முதுமை, நோய் மற்றும் இறப்பு போன்ற பிரச்சனைகளுக்கான தீர்வைக் கண்டறிய ஒருநாள் இரவில் தன் மனைவி, குழந்தை, அரண்மனை, ராஜவாழ்வு போன்ற அனைத்து உடமைகளையும் விட்டு, துறவற வாழ்க்கையை வேண்டி அரண்மனையை விட்டு வெளியேறினார்.


இந்த வேதனைகளுக்கெல்லாம் விடைகாணவேண்டுமென்று எண்ணி முதலில் இரண்டு பிராமணர்களிடம் கல்வி கற்கச் சீடராக அமர்ந்தார். பிராமணர்களிடமிருந்து கற்ற கல்வியின் பயனால் எவ்விதமான தெளிவோ, ஞானமோ கிடைக்காததால் துறவறம் பூண்டு, ஐந்து ஞானிகளுடன் இணைந்து தியானத்தில் ஈடுபட்டார்.

இதற்காக உணவு, உறக்கமின்றி 6 வருடங்கள் தம்மை வருத்தி தியானத்தில் அமர்ந்து ஞானம் பெற முயன்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்விதமான பயனும் கிடைக்கவில்லை. அதனால் இம்முறையைக் கைவிட்டார். மற்ற ஐவரையும் பிரிந்து, தான் ஞானம் பெறவேண்டுமானால் தனது உடம்பில் வலு வேண்டும். அதற்காக உணவும் நீரும் அவசியம் என்ற உண்மையை உணர்ந்தார். நாங்கள் சாரநாத்தில் உள்ள பொருட்காட்சிச் சாலையில் புத்தரின் வெவ்வேறு நிலையில் உள்ள சிலைகளையும் சிற்பங்களையும் கண்டோம். உடலெல்லாம் மெலிந்து வெறும் எலும்புக்கூட்டுத் தோற்றத்துடன் தவம்செய்யும் சிலையைக் கண்டபோது அவரின் வைராக்கியத்தை ஓரளவு உணரமுடிந்தது. ஒரு நேரம் சாப்பாடு தவறினால் வேதனைப்படும் நாங்களெங்கே, 6 வருடங்கள் உணவின்றி தவம் செய்த புத்த மகான் எங்கே! சித்தார்த்தர் சகல சுகபோகங்களுக்கும் கடும் பட்டினிக்கும் இடைப்பட்ட வழிமுறையை அமைத்துக்கொண்டு தியான முறையைத் தொடர்ந்து கடைப்பிடித்தார். தற்போதய பிகார் மாநிலத்தில் உள்ள கயா என்னும் இடத்தில் அரச மரத்தடியில் ஞானநிலை அடையும்வரை தொடர்ந்து ஒரு வாரம் கடும் தவம் செய்தார். அங்குதான் அவர் விரும்பிய ஞானநிலைக்குத் தாம் வந்ததாக உணர்ந்து தன்னை "தத்தாகதர்" என்று அறிவித்துக்கொண்டார். அதன் பொருள் உண்மைநிலை அறிந்தவர் என்பதாகும். சாரநாத்தில் கௌதம புத்தர் பழைய ஐவரையும் சீடர்களாக ஏற்றுக்கொண்டு தன் முதல் பிரசங்கத்தை நிதழ்த்தினார் என்பது வரலாறு. சாரநாத்தில் பலர் இப்படியான தியானங்களில் ஊறிப்போயிருப்பதைக் கண்டோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தர் என்றுமே தன்னை ஒரு தேவன் என்றோ. கடவுள் அவதாரம் என்றோ கூறிக்கொண்டதில்லை. தான் புத்த நிலையை அடைந்த மனிதன் என்பதையும் புவியில் பிறந்த மானிடர் அனைவரும் இந்த புத்த நிலையை அடைய முடியும் என்பதை தெளிவாக வலியுறுத்தினார்.

புத்தரின் போதனைகளில் முக்கியமானவை:

| | |
|---|---|
| நல்ல நம்பிக்கை | நல் வாழ்க்கை |
| நல்லெண்ணம் | நன் முயற்சி |
| நல் வாய்மை | நற்சாட்சி |
| நற் செய்கை | நல்ல தியானம் |

பௌத்த மதத் தத்துவம் 12 எனப் பகுத்துள்ளனர். அவையாவன; பேதமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம் மற்றும் வினைப்பயன். இத் தத்துவங்களின் தன்மையை சீத்தலைச் சாத்தனார் தாம் இயற்றிய மணிமேகலையில் பின்வருமாறு கூறுகின்றார்:

பேதமை செய்கை உணர்வே அருவுரு
வாயில் ஊறே நுகர்வே வேட்கை
பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்
இற்றென வகுத்த இயல்பீராறும்
பிறந்தோர் அறியில் பெரும் பேறுஅறிகுவர்
அறியார் ஆயின் ஆழ்நர கறிகுவர்.

பௌத்தர்களின் சுலோகங்கள் சாரநாத்தில் ஒலிக்கின்றன:

புத்தம் சரணம் கச்சாமி - புத்தரிடம் சரணடைகின்றேன்

தம்மம் சரணம் கச்சாமி - நான் நீதியிடம் சரணடைகின்றேன்

சங்கம் சரணம் கச்சாமி - நான் கட்டளையிடம் சரணடைகின்றேன்

இந்த சரணம் என்ற சொல் தமிழுக்கு பாளியிலிருந்து வந்திருக்க வேண்டும் என்பது அறிஞர் கருத்து.

சாரநாத்தில் புத்தரின் சிலைகளும் போதனைகளும் கூடங்களில் காட்சிக்கு வைக்கப்படிருக்கின்றன.

பௌத்த மத சுலோகங்களும் சிந்தனைகளும் பாளி (பிரகிருத) மொழியில் எழுதப்பட்டிருந்தன. அவற்றைப் பார்க்கும் போது வடமொழி போல் காட்சியளித்த போதிலும், எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டி பர்னால் அந்த எழுத்துக்களைப் புரிந்து கொள்ளவில்லை. வடநாட்டிலிருந்து தென்னாட்டுக்கு வந்து மதங்களை இரண்டு வகையாகப் பிரித்திருக்கின்றனர். அவை பிராமண மதம், சிரமண மதம் என்பனவாகும். பிராமணம் என்பது வைதிக மதம் சிரமணம் என்பது பௌத்த, ஜைன (துயவை) மதங்களாகும். சிரமணம் தமிழில் சமணம் என்று குறிப்பிடப்பட்டாலும் பிற்காலத்தில் ஜைன மதத்தையே சமணம் என்று அழைத்தார்கள். இந்தியாவில் இந்துமதம் என்று ஒரு மதம் இருக்கவில்லை என்பதுதான் ஆராய்ச்சியாளர்களின் முடிவு. இந்து மதம் என்பது பிரித்தானியர்களால், இந்து மதத்தின் ஆறு பிரிவுகளான சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்னும் வழிபாடுகளுக்கு வழங்கப்பட்ட ஒரு சொல் அல்லது அடையாளம். இந்தியாவில் வாழ்ந்த பல்லின மக்களின் ஒருமைப்பாட்டிற்கு ஆதி சங்கரரின் பங்கு பற்றி பின்னர் குறிப்பிடுகின்றேன்.

தமிழர்களின் மதம் என்ன? பண்டைய தமிழரின் கடவுள் வழிபாட்டில் சிவனும் திருமாலும் இருந்தாக சங்க நூல்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. சிவனியம், மாலியம் என இரண்டாகவிருந்த மதங்கள் குமரினியம்(கௌமாரம்) ஆனைமுகவம்(காணாபத்தியம்) கதிரவம்(சௌரம்) காளியம்(சாக்தம்) என்னும் மதங்களோடு ஆறாகப் பிற்காலத்தில் பின் பற்றப்பட்டன. தொல் தமிழர் தாம் வாழ்ந்த நிலப்பகுதியை குறிஞ்சி(மலை), முல்லை(காடு), மருதம்(வயல்), பாலை(வரண்ட நிலம்), நெய்தல்(கடல்) எனப் பகுத்தனர். இவற்றில் குறிஞ்சி நிலத்தில் சிவ நெறியும் முல்லை நிலத்தில் மால் நெறியும் காலப் போக்கில் நிலைத்தன என தேவநேயப்பாவாணர் என்னும் தமிழ் அறிஞர் தமது ஆராய்ச்சிக் கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளார். முல்லை, குறிஞ்சி நில மக்கள் தம் தெய்வத்தைத் தீயின் கூறாகக் கொண்டு சேந்தன் (சிவந்தவன்-சிவா) என்று, பெயரிட்டு வணங்கினர். வேட்டைத் தொழிலைக் கொண்டிருந்த குறவர் தம் தெய்வத்தை மறவனாகக் கருதி முருகன் என்றும், அந் நிலத்தின் சிறப்பான கடம்பின் மலரை அணிவித்து கடம்பன் என்றும், வேலைப் படையாக்கியதனால் வேலன் என்றும் பெயரிட்டு வழிபட்டனர்.

சிந்துவெளி வரி வடிவம் சித்திர எழுத்து முறையில் தோன்றியது. இதில் நன்கு அறியப்பட்ட காவுவோர் அல்லது பொறையர் என்பது சிந்துவெளியில் வாழ்ந்த ஒரு குடியினரைக் குறிக்கும். முருகு அல்லது முருகன் சிந்து வெளி புதை பொருள் வாசகத்தில் வரும் காவுவோரோடு தொடர்பு படுத்தப் படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருக வழிபாட்டில் பக்தர்கள் எடுக்கும் காவடியில் இந்த மரபு பின்பற்றி வருவதைக் காணலாம் என்று முனைவர் மகாதேவன் ஆராய்ச்சிக் கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளார்.

சங்க இலக்கியத்தில் பத்துபாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என மூன்று பகுதிகள் உள்ளன. பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை மற்றும் மலை படுகடாம் ஆகியன அமைந்துள்ளன. பத்துப்பாட்டின் முதல் பாடலாகிய திருமுருகாற்றுப்படை (கி.பி. 600 – கி.பி. 900) இத்தொகுப்புக்கு கடவுள் வாழ்த்து நிலையில் அமைந்துள்ளதாகக் கொள்ளலாம். தமிழ்நாட்டில் பக்தி இலக்கியங்களில் ஒன்றான இந்நூலிலிருந்து முருகனைத் தெய்வமாக தமிழர்கள் வழிபட்டார்கள் என்று அறிகின்றோம். சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களாவன: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகும். இவற்றில் நற்றிணையின் கடவுள் வாழ்த்தில் திருமாலைப் பற்றிய செய்யுட்கள் வருகின்றன. பரிபாடலில் சிவனையும் திருமாலையும் பற்றி அதிக செய்யுள்கள் அமைந்துள்ளன. மற்றய எட்டுத்தொகை நூல்களில் தமிழர்களின் கடவுளைப்பற்றிய செய்திகள் வந்தாலும், பரிபாடலைப் போல் அவை அமையவில்லை என்பது அறிஞர் கருத்து.

தமிழகத்தில் ஆறாம் நூற்றாண்டில் எழுந்த பக்தி உணர்வு இந்தியாவில் பெரும் மாற்றத்தை உண்டுபண்ணியுள்ளதாக பேராசிரியர் லால் (Professor Vinay Lal, UCLA) அவர்கள் தன் ஆராய்ச்சிக் கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளார். இவற்றில் நாயன்மார்கள் பற்றும் ஆழ்வார்களின் பங்கு அளப்பரியது. இவற்றிற்கெல்லாம் முற்பட்டதாக பரிபாடல் செய்யுள்கள் திகழ்கின்றன. இன்று கிடைக்கப்பெற்ற இருபத்திரண்டு பாடல்களில் ஆறு பாடல்கள் திருமாலுக்கும் எட்டுப் பாடல்கள் முருகனுக்கும் அமைந்துள்ளன.

இருகை மாஅல்!
முக்கை முனிவ! நாற்கை அண்ணல்!
ஐங்கை மைந்த! அறுகை நெடுவேள்!
எழுகை யாழ! எண்கை ஏந்தல்!
ஓன்பதுற்றுத் தடக்கை மன்பே ராள! (திருமால்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் எதிர்த்து ஏற்றார் மதுகை மதம்தபக்
கார்எதிர்ந்து ஏற்ற கமம்சூழ் எழிலிபோல்
நீர்நிரந்து ஏற்ற நிலம்தாங்கு அழுவத்துச்
சூர்நிரந்து சுற்றிய மாதபுத்த வேலோய்! நின்
சீர்நிரந்து ஏந்திய குன்றோடு நேர்நிரந்து
ஏறுமாறு ஏற்கும்இக் குன்று (செவ்வேள்- முருகன்)

கி.மு ஐந்தாம் நூற்றாண்டில் தொடங்கிய பௌத்தமதம் கடைச்சங்க (கி.மு. 1500 – கி.பி 250) காலத்திற்குப் பின் தான் தமிழ்நாட்டுக்கு வந்திருக்கவேண்டும் என்று சில ஆராய்சியாளர்கள் கருதுகின்றார்கள். பௌத்தமதத்தைப்பற்றிய குறிப்புகள் கடைச்சங்க தொகை நூல்களுட் காணப்படவில்லையாயினும், அச்சங்க காலத்துக் காப்பிய நூல்களில் காணப்படுகின்றன. அதாவது கடைச்சங்க நூல்களாகிய மணிமேகலை, சிலப்பதிகாரம், மதுரைக் காஞ்சி என்னும் நூல்களில் பௌத்த மதத்தைப் பற்றிக் கூறப்படுகின்றது. மணிமேகலை என்னும் பௌத்த காவியத்தை இயற்றிய பௌத்தராகிய கூல வாணிகர் சாத்தனார் அருளிச்செய்த செய்யுள்கள் அகநானூறு, நற்றிணை, புறநானூறு, கலித்தொகை என்னும் நூல்களிலும் தொகுக்கப்பட்டுள்ளன. இளம்போதியார் என்பவரும் கடைச்சங்க காலத்துப் பௌத்த புலவர். இந்த இளம் போதியார் இயற்றிய செய்யுள் ஒன்று நற்றிணை என்னும் கடைச்சங்கத் தொகை நூலில் 72ம் பாட்டாகத் தொகுக்கப்பட்டுள்ளது. மணிமேகலையில் புத்த தருமம் போற்றுதல் பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

எங்கோன், இயல்குணன், ஏதமில் குணப்பொருள், உலகநோன்பின் பல்கதி உணர்ந்து, தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்,

இன்பச் செவ்வி மன்பதை எய்த
அருளறம் பூண்ட ஒருபெரும் பூட்கையின்,
அறக்கதிர் ஆழி திறப்பட உருட்டிக்
காமற் கடந்த வாமன் பாதம்
தகை பாராட்டுதல் அல்லது யாவதும்
மிகைநா வில்லேன், வேந்தே வாழ்கென-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த மதம் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பின்பற்றப் பட்டுவந்தது. அவை தேரவாதம், மகாயானம் என்பன. தேரவாதம் இலங்கை மற்றும் தென் கிழக்காசிய நாடுகளான கம்போடியா லாவோஸ் தாய்லாந்து பர்மா போன்ற நாடுகளில் பின்பற்றப்படுகின்றது. மகாயானம் சீனா, ஜப்பான், கொரியா, வியட்நாம், சிங்கப்பூர், தாய்வான் போன்ற நாடுகளில் பரவியுள்ளது. இந்த இரு பிரிவுகளையும் விட மூன்றாவது வச்சிரயானமாகும். இது திபேத்து, மங்கோலியா நாடுகளில் பின்பற்றப்படுகின்றது. இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டில் மகாயானம் என்ற பௌத்த மதப் பிரிவே பரவியிருந்தது. கி.மு ஐந்தாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் தோன்றிய பௌத்த மதம் தென் இந்தியாவில் உள்ள தமிழ் நாட்டிற்கு எப்பொழுது வந்தது? கி.மு. 258ல் அசோகச் சக்கரவர்த்தியால் எழுதப்பட்ட ஒரு சாசனத்தில் போர் செய்து பலரைக் கொன்று பெறும் வெற்றியை விடஅறவழியில் பெறும் வெற்றி தமக்கு விருப்பமானது என்ற செய்தி கிடைத்துள்ளது. இதற்கேற்ப பல மருத்துவ நிலையங்களைத் தமது நாட்டிலும், தமிழ்நாட்டிலும், மற்றும் இலங்கையுட்பட பல நாடுகளில் நிறுவியுள்ளார். மரங்களை இந்தியாவெங்கும் நட்டுள்ளார்.

அசோகனின் பாட்டனான சந்திர குப்தன் காலத்தில் சமணம் தமிழ் நாட்டிற்கு வந்ததாகச் சான்றுகள் உள்ளன. இதே காலத்தில் பிராமண மதம் தமிழ் நாட்டிற்குள் வந்திருக்க வேண்டும். தமிழர்கள் வட நாட்டிலிருந்து வேறு பட்ட சிவனியம் திருமாலியம் என்ற வழிபாட்டினைக் கொண்டிருந்தனர் என முன்னர் குறிப்பிட்டிருந்தேன். வடநாட்டிலிருந்து தென் நாட்டிற்கு வந்த மதங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கையுடையவை. அமைதியாக இருந்த தமிழகத்தில் சமயப் பூசல்களைக் கொண்டு வந்தன. கோவலனின் மகளான மணிமேகலை வஞ்சிமாநகர் சென்ற போது சமண பௌத்த பிராமண சமயவாதிகள் தத்தம் சமயங்களின் பெருமைகளை அவளுக்கு உரைத்தனர் என்று ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் குறிப்பிடப் பட்டுள்ளது. கி.பி முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் பௌத்த மதம் தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்தாலும் நாலாம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் இதன் செல்வாக்கு வீழ்ச்சியடையத் தொடங்கியது. இந்தக்கால கட்டத்தில் தமிழ் நாட்டில் பல்லவரின் ஆட்சியிருந்தது. பௌத்த கோயில்கள் சமணக் கோயில்களாக மாற்றப்பட்டன. பௌத்தர்கள் இலங்கைக்குத் துரத்தப்பட்டனர். கி.பி. நாலாவது, ஐந்தாவது நூற்றாண்டிற்குப் பின்னர் பௌத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதத்தின் சிறப்புக் குன்ற சமண மதம் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. இதன் காரணம், பிராமண மதமான வைதீக மதத்தில் பல குறைபாடுகள் இருந்தன:

- யாகத்தில் உயிர்க் கொலைகள் செய்யும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டது.
- கடவுள் வழிபாட்டு முறையில் பல சடங்கு முறைகள் (Rituals) இருந்தன.
- நால்வகை சாதிப் பாகுபாட்டில் பிரமாணர் உயர்ந்தவர்.
- பிராமணரைத் தவிர மற்றவர் வேதம் உபநிடதம் முதலிய நூல்களைக் கற்கக் கூடாது.

இதற்கு மாறாக சமண மதத்தில் உயிர்க் கொலைகள் இல்லை. சாதிப் பாகுபாடு இல்லை. யாரும் உயர் நூல்கள் படிக்கலாம்.

பொது மக்களின் செல்வாக்கைப் பெற பிராமண மதம் தன் அடிப்படை கொள்கைகள் சிலவற்றில் மாறுதல்கள் செய்தது. யாகங்களில் உயிர்க் கொலைகள் நிறுத்தப்பட்டன. சிவன், திருமால், முருகன் போன்ற தமிழரின் கடவுள்கள் பிராமணத்தில் ஏற்கப்பட்டன. நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களின் பங்களிப்பால் பக்தி இலக்கியம் இந்தியாவெங்கும் பரவியது. ஆதிசங்கரரின் பங்களிப்பால் கௌதம புத்தர் திருமாலின் ஓர் அவதாரமானார். இது இந்து மதத்தின் ஒருமைப்பாட்டுக்கு உதவியதுடன் பௌத்த சமண மதங்களிலிருந்து மக்களை திரும்பவும் இந்து மதத்திற்கு மாற்ற உதவியது. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதிசங்கரரச்சாரியர் தற்போதய கேரளநாட்டிலிருந்து வட இந்தியாவரை பயணம் செய்து இந்து மதத்தின் சிறப்புக்கள் பற்றி பிரசங்கங்கள் செய்தார். அதில் முக்கியமாக புத்தர் திருமாலின் ஓர் அவதாரம் என்ற கருத்தை வலியுறுத்திச் சொன்னார். புத்தரின் அன்னை மாயாதேவி ஒரு நாள் தன் திருவயிற்றிலிருந்து வெள்ளை யானையொன்று வெளியேறுவதாக் கனவு கண்டார். இதனால், பௌத்தர்கள், புத்தர் யானை முகமுடைய விநாயகரின் அவதாரம் என்றும் எழுதுகின்றனர். புத்தருக்குத் தருமராசன் என்றும் விநாயகன் என்றும் பெயர்கள் உள்ளன. இப்பெயர்களை நிகண்டுகளிலும் காணலாம். விநாயகவழிபாடு பௌத்த சமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவியிருக்கும் நாடுகளிலும் பரவி இருக்கின்றது. இவற்றில் தாய்லாந்து, பர்மா, சீனா, ஜப்பான், கம்போடியா போன்ற நாடுகள் அடங்கும்.

இந்தியாவில் குப்தாவின் ஆட்சியில் தான் (5ம் நூற்றாண்டு) விநாயகர் வழிபாடு சைவசமயத்தில் புகுத்தப்பட்டது என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. தருமராசன், விநாயகன் என்ற பெயரிலிருந்த பௌத்த கோயில்களை பிள்ளையார் கோயிலாக மாற்றிவிட்டார்கள் என்பது ஆராய்சியாளர்களின் கருத்து. ஆதிசங்கரரின் பிரசாரங்களுக்குப் பிறகு இந்து மதத்திலும் மடங்கள் அமைத்து அவற்றில் மதத்தலைவர்கள் இருந்து சமயத் தொண்டாற்றியது பௌத்த மதத்தின் தாக்கத்தால் ஏற்பட்டது. மடங்கள் சிருங்கேரி (கர்நாடகம்), பூரி (ஒடிசா), ஜோதி மட் (உத்தர்காண்ட்), துவார்க (குஜராத்), என நான்கு திக்குகளிலும் ஏற்படுத்தப்பட்டன.

ஆதிசங்கரரின் மாயாவாதமதம் என்னும் ஏகான்மவாத மதம் என்று சொல்லப்படும் அத்வைத மதத்தின் அடிப்படைக் கொள்கை மகாயான பௌத்த மதத்திலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிஞர்கள் கருதுகின்றார்கள். உண்மை ஒன்றுதான். அது இரண்டாவதாக இல்லாததாக ஒன்றேயாக இருக்கின்றது என்ற பிரம்மத்தைப் பற்றிப் பேசும் கொள்கைக்கு அத்வைதம் என்று பெயர். புத்தர் கடவுளைப்பற்றிப் பேசாது ஏறத்தாழ கடவுள் இல்லையென்ற கொள்கையினர் போல் இறுதிநிலை ஞானமே என்று வாதித்து வேத சார்பற்ற மதமான பௌத்த மத்ததைப் பரப்பியிருந்தார். ஆதிசங்கரர் பிரம்ம கொள்கையை வலியுறுத்தி உலகத்தைப் பொய்யென்று வாதித்து உண்டாக்கிய மதம் அத்வைதம்.

ஆதிசங்கரரின் அறிவுத் திறன் பற்றி சுவாமி விவேகானந்தர் வியந்து பாராட்டியுள்ளார். ஆதிசங்கரர் 16 வயதுக்குள் தமது நூல்கள் அனைத்தையும் எழுதி முடித்ததாகக் கூறப்படுகின்றது. இந்து மதத்தின் ஆதார நூல்களான பிரம்மசூத்திரம் உபநிடதங்கள் பகவத் கீதை ஆகியவற்றுக்கு முதன் முதலாக விரிவுரை எழுதியவர் ஆதிசங்கரர். எங்கும் நிறைந்திருப்பது ஒரே பரம்பொருள். நாம் கண்ணால் காண்பவையெல்லாம் அந்தப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பொருளின் வெவ்வேறு தோற்றங்கள் என்பது அத்வைத வேதாந்தம். நம் கண்ணுக்குப் பார்ப்பவையெல்லாம் வேறுபட்டவையாகக் காணப்பட்டாலும் அவையெல்லாம் ஒன்றே என்று நவீன விஞ்ஞானமும் சொல்கிறது. இதன் பொருள் மூலப்பொருள்கள் (Elements) ஒன்றுக்கொன்று மாறுபட்டவையாகத் தோன்றினாலும் ஒரே சக்திதான் (Energy) இந்த மூலப் பொருள்கள் வடிவமாக விளங்குகிறது என்று அல்பேட் ஐன்ஸ்ரைன் தமது $E=MC^2$ என்ற சூத்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார்.



ரிஷிகேஷில் கங்கை நதியோட்டம்



ரிஷிகேஷில் கங்கைக் கரையில் உள்ள ஒரு ஹோட்டல்

மேலே உள்ள படத்தில் காணப்படும் ஹோட்டல் உத்தரகாண்ட் எனப்படும் மாநிலத்தில் உள்ள ரிஷிகேஷ் எனப்படும் ஊரில் இருக்கின்றது. நாங்கள் விரும்பியது போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை வளம் நிரம்பப் பெற்ற இமயமலையின் அடிவாரத்தில் கங்கை நதிக்கரையில் தங்கும் வாய்ப்புக் கிடைத்தது. நாங்கள் தங்கிய இடம் ஓர் அழகான மலைப் பிரதேசம். ஒரு பக்கத்தில் அழகாகப் பூத்துக் குலுங்கும் மரங்கள். மறுபக்கத்தில் அமைதியாக ஓடும் கங்கை. விதம் விதமாகக் கத்தும் பறவைகள். எங்களுக்கு உலகம் மிக அழகாக இருப்பது போல் தோன்றியது. இந்த கங்கைப் பிரவாகத்தில் தான் சங்கரரின் அத்வைதப் பிரச்சாரம் ஆரம்பமானது என்று கூறப்படுகின்றது. தான் வழிபடும் தெய்வமே உயர்ந்தது பிற தெய்வங்களை மதிக்க மாட்டேன் என்ற வேற்றுமை பாராட்டும் மனேபாவத்தை மாற்றி பிற தெய்வங்களையும் வழிபடும் முறையை ஏற்படுத்தித் தந்தார். இந்து மதத்தின் ஆறு பிரிவுகளான சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகியவற்றை இணைத்து மத ஒருமைப்பாட்டுக்கு வழிவகுத்தார். தமது சீடர்களில் வடக்கில் பிறந்த சுரேச்வராச்சார்யாரை தெற்கில் சிருங்கேரியில் உள்ள மடத்திற்கும் தெற்கில் பிறந்த தோடகரை வடக்கிலும், பத்மபாதரை மேற்கிலுள்ள மடத்திற்கும் பீடாதிபதிகளாக்கினார். மகாராஷ்டிரா மாநிலத்தில் பிறந்தவர்கள் இராமேசுவரம் கோவிலில் பூஜை செய்யும்படியும் கேரளத்தில் பிறந்தவர்கள் பத்ரிநாத்தில் பூஜை செய்யும்படியும் செய்தார்.

ஹோட்டலில் இருக்கும் போது கங்கையின் சலசலப்பான ஓட்டம் இரவில் காதில் கேட்ட வண்ணமிருக்கும். அப்போது நான் யோசிப்பதெல்லாம் எப்படி இந்த சிறுவயதில் சங்கரரால் இவற்றை எல்லாம் சாதிக்க முடிந்தது என்பதேயாகும். காரில் புது டெல்லியிலிருந்து ரிஷிகேஷ் வந்தடைய எங்களுக்கு நான்கு மணித்தியாலங்கள் எடுத்தது. ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன் இருந்த சூழ்நிலை வேறு. பாதைகள் மிகவும் கரடு முரடானவை. வழியெங்கும் காட்டுப்பகுதியைச் சார்ந்த கொடும் விலங்குகளும் மற்றைய உயிரினங்களும் தரும் சவால்களையும் எதிர் நோக்க வேண்டும். இப்படியான இடர்களையெல்லாம் சகித்துக்கொண்டு தெற்கே கன்யாகுமரியிலிருந்து வடக்கே காஷ்மீரம் வரை பாதயாத்திரை சென்று மத ஒருமைப் பாட்டுக்குக்காக பிரசாரம் செய்துள்ளார். இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு தனது Discovery of India என்ற புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"There is a significance about these long journeys of Shankara throughout this vast land at a time when travel was difficult and the means of transport very slow and primitive. The very conception of these journeys, and his meeting kindred souls everywhere and speaking to them in Sanskrit, the common language of the learned throughout India, brings out the essential unity of India even in those far-off days. Such journeys could not have been uncommon then or earlier, people went to and fro in spite of political divisions, new books traveled, and every new thought or fresh theory spread rapidly over the entire country and became the subject of interest talk and often of heated debate. All this was so then and Shankara was doubtless fully aware of it. It would seem that Shankara wanted to add to this sense of national unity and common consciousness. He functioned on the intellectual, philosophical and religious plane and tried to bring about a greater unity of thought all over the country. He functioned also on the plane in many ways, destroying many a dogma and opening the door of his philosophic sanctuary to every one who was capable of entering it. By locating his four great monasteries in the north, south, east and west, he evidently wanted to encourage the conception of a culturally united India."

மத்திய ஆசியாவிலிருந்து இற்றைக்கு 4500 வருடங்களுக்கு முன் ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்து குடியேறினார்கள் என்று வரலாறு கூறுகின்றது. வேட்டையாடுவதில் வல்லவர்களாக இருந்த இம்மக்கள் எந்தவிதமான படிப்பறிவற்றவர்களாக இருந்தார்கள். இம் மக்கள் இருக்கு வேதம் போன்ற உயரிய நூல்களை இந்தியாவிற்கு தந்தார்கள் என்பதை நம்புவதற்குச் சான்றாக எந்தவித கல்வியறிவையும் கொண்டிருக்கவில்லை. இதற்குமாறாக மொகிஞ்சதாரோ, ஹறப்பா போன்ற பிரதேசங்களில் வாழ்ந்த மக்களின் உயர்ந்த வாழ்வுமுறைக்குச் சான்றாக புதைபொருள் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட நகரங்களின் அமைப்பு முறைகள் சான்று பகர்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் இந்த நகரங்கள் தற்போதய பாகிஸ்தான் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட வரலாறு சுவையானது. 20ம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் (1920) ஆங்கிலேய பொறியியல் வல்லுனர்கள் கராய்ச்சிலிருந்து மற்ற நகரங்களுக்கு ரயில் பாதைகள் அமைப்பதற்குத் தேவையான செங்கல்களை ஓர் உள்ளூர் கட்டட ஒப்பந்தக்கார் மூலம் பெற்றுக்கொண்டனர். அந்த செங்கல்களின் தரம் தங்களின் தாய்நாடான இங்கிலாந்தில் உற்பத்திசெய்யப் படுவதை விட மிகவும் உயர்வானதாக இருக்கக் கண்டனர். ஆங்கிலேயர்களுக்கு இது மிகவும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவர்கள் செங்கல் உற்பத்தி செய்யப்படும் தொழிற்சாலையைப் பார்வையிட விரும்பினர். உள்ளூர் ஒப்பந்தக்காரருக்கு இது பெரிய அதிர்ச்சி. காரணம் அப்படியான தொழிற்சாலையொன்றும் இருக்கவில்லை. ஆகவே உண்மை வெளியில் வந்தது. செங்கல்கள் எல்லாம் புதைந்து போயிருந்த மிகப்பிரமாண்டமான பண்டைய நகரத்திலிருந்தே எடுக்கப்பட்டிருந்தன. அன்று தொடங்கிய ஆராய்ச்சி இன்றுவரை தொடர்கின்றது.

இதில் வேடிக்கை என்னவென்றால் சிந்துவெளி நாகரீகத்தை பாகிஸ்தானியர்கள் தங்கள் பாரம்பரிய சொத்தாக உரிமை கொண்டாடுகின்றனர். உண்மையில் பாகிஸ்தானில் வாழும் பிரகூய் (Brahui) பேசும் மக்கள் இந்த நாகரீகத்திற்குச் சொந்தக்கார்கள் என்று சொன்னால் அது மிகையாது. காரணம் பிரகூய் திராவிட இனத்தைச் சேர்ந்த மொழி என்பது பல ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்த ஒரு முடிவாகும். சிந்துவெளி வாசகங்களுக்குப் பட்டியல்களை உருவாக்கிய ஹன்ரர், பர்ப்போலா, மகாதேவன் (Hunter, Parpola, Mahadevan) ஆகிய மூவருமே சிந்துவெளி வாசகங்களுக்கு ஏற்புடைய மொழி திராவிட மொழியே என்று சுட்டிக்காட்டியிருப்பது குறிப்பிடத் தகுந்தது.

ஆரிய மொழி பேசும் மக்கள் தெற்கு ஆசியாவிற்கு கிட்டத்தட்ட கி.மு. 1900க்குப் பிறகே, அதாவது சிந்துவெளி நாகரீகம் முதிர்ச்சி அடைந்து சரிந்து குலைந்த பின்னரே குடிபெயர்ந்திருக்கின்றார்கள். சிந்து வெளி நாகரிகத்து மக்கள் தொகையோடு ஒப்பிடும்போது குடியேறிய ஆரியர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்திருக்க வேண்டும். ஆனால் ஆரியர்கள் உயர்ந்த மேலாதிக்கம் பெறுவதற்கு அவர்களுடைய மேலான படைக் கருவிகளும் எளிதாக இடம்பெயர்தலும் காரணிகளாக அமைந்தன என்று நம்பப் படுகின்றது. ரிக் வேத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திற்கு முன்னரே (கி.மு 1500-1300) ஒரு கலப்புச் சமூகமும் பண்பாடும் உருவாகும் நிலை வந்ததாக மகாதேவன் அவர்கள் தன் ஆராய்ச்சிக் கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளார்.

இலச்சினைகளின் சித்திரப் பதிவுகள் வெளிப்படுத்தும் சிந்து சமயம் என்பது எருமைக் கொம்பு அணிந்த ஆண் தெய்வம், பாம்பு மற்றும் லிங்கச் சின்னம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. பொதுவாக ஆரிய வழிபாட்டு முறை நெருப்பை (ஹோமகுண்டம்) அடிப்படையாகக் கொண்டது. இதற்கு ஆரியர்கள் குளிர்ப்பிரதேசங்களில் இருந்து வந்தமை ஒரு காரணமாக இருக்கலாம். அதற்கு மாறாக திராவிட வழிபாடு நீரை அடிப்படையாகக் கொண்டது. மொகஞ்சதாரோவில் Great Bath என்று தவறாக அடையாளம் காட்டப்படும் பொய்கை எங்கள் ஊர் கோயில் குளங்களின் நேர் முன்னோடி என்று மகாதேவன் சுட்டிக்காட்டுகின்றார்.

இந்தியாவிலும், இலங்கையிலும் கிறிஸ்தவ மிஷனரிகள் இந்து மதத்தின் மூட நம்பிக்கைகளைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, ஏராளமான கிறிஸ்தவ நூல்களை அச்சிட்டு வெளியிட்டனர். இந்துத் தெய்வங்களைப் பழித்தனர். இந்துக்களை கிறிஸ்தவர்களாக ஆக்கும் பணியிலும் ஈடுபட்டனர்.

இந்து மதத்தில் பழமை வாதமும் மூட நம்பிக்கைகளும் இருப்பதை உணர்ந்த சில இந்துக்களில், ராஜாராம் மோகன்ராய் என்பவர் மிகவும் குறிப்பிடத்தக்கவர். இவர் தோற்றுவித்த பிரம்ம சமாஜம், சாதிக் கட்டுப்பாடுகளை நீக்குதல், அனைவருக்கும் சம உரிமையளித்தல், பெண்கள் கல்வி, பெண்களின் திருமண வயதை உயர்த்துதல் போன்ற பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தது. ரவீந்திரநாத் தாகூரின் தந்தை தேவேந்திரநாத் தாகூர் என்பவர், பிரம்ம சமாஜத்தை வளர்க்க உதவினார்.

உபநிடதங்களை ஏற்றுக்கொண்டதுடன், பல கடவுள் கொள்கை, உருவ வழிபாடு, அவதாரக் கொள்கை, குருவின் தேவை முதலியவற்றை இந்த சமாஜம் எதிர்த்தது. பிரம்ம சமாஜத்தின் அறிவுபூர்வமான அணுகுமுறை ஆரம்ப காலங்களில் சுவாமி விவேகானந்தருக்கு பிடித்திருந்தது. அதன்படி அவர் வழிபாடுகளில் ஈடுபட்டாலும், பிரம்ம சமாஜத்தின் மற்ற உறுப்பினர்களிடமிருந்து வேறுபட்டார். கடவுள் என்ற ஒருவர் இருந்தால், பிரார்த்தனைகளுக்குச் செவிமடுத்து பக்தன் முன் தோன்றுவார் என்ற நம்பிக்கை, அவரை பிரம்ம சமாஜத்திலிருந்து விலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தது. உண்மையை அறியவேண்டும்; இறைவனை உணரவேண்டும் என்ற ஆவல் அவரிடம் கொழுந்துவிட்டு எரிந்தது. இறைவனை உருவமுடையவராக நினைத்தாலும், உருவமற்றவராக நினைத்தாலும் மனித வடிவையோ குணங்களையோ மனதில் ஏற்றாமல் நம்மால் அவரைத் தியானிக்க முடியாது.

இதை உணரும் முன்பு சுவாமி விவேகானந்தர், பிரம்ம சமாஜத்தினரின் கொள்கைப்படி இறைவனை உருவமற்ற, ஆனால் குணங்களுடன் கூடியவராக தியானித்து வந்தார். இதுவும் ஒரு விதத்தில் கற்பனை என்று முடிவு செய்து அந்த தியானத்தை கைவிட்டு, "இறைவா! உன் உண்மையான வடிவத்தைக் காண என்னைத் தகுதியுடையவனாக்கு" என்று மனமுருகி வேண்டினார். அதன்பின் மனத்திலிருந்து எல்லா எண்ணங்களையும் நீக்கிவிட்டு, காற்றில்லா இடத்தில் எரியும் தீபச்சுடர் போன்று மனத்தை ஆடாது அசையாது வைத்திருக்கப் பயிற்சி செய்தார். இவ்வாறு சிறிது காலம் பயின்றதும் அவரது மனம் பூரணமாக அடங்கிவிட்டது. சில வேளைகளில் அவருக்கு உடலுணர்வும், கால உணர்வும் கூட இல்லாமல் போயின. வீட்டில் உள்ள அனைவரும் படுக்கச் சென்றபின் அவர் தம் அறையில் இவ்வாறு தியானிப்பார். பல நாட்கள் இரவு முழுவதும் தியானத்திலேயே கழியும். (ஆதாரம்: சுவாமி விவேகானந்தர் வாழ்க்கை வரலாறு- சுவாமி ஆசுதோஷானந்தர்).

ஸ்ரீராம கிருஷ்ணர் கடவுளின் மனிதத் தன்மையை வெளிப்படுத்தினார் என்றால், சுவாமி விவேகானந்தர் மனிதனின் கடவுள் தன்மையை வெளிப்படுத்தினார் என்று பொருள் கொள்ளலாம். இந்தியாவின் ஆன்மீகச் செல்வம் உலகின் சிந்தனைப் போக்கை மாற்றும் என்று மாக்ஸ் முல்லர், போல் பிரண்டன் போன்றவர்கள் நம்பினார்கள். 1893ம் ஆண்டு செப்டெம்பர் 11ம் திகதி, சிகாகோ கலைக்கழகத்தில் சர்வமத மகாசபை கூடியபோது, உலகின் பல வேறு மதங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அவற்றில், பிரம்ம சமாஜம், யூத, இஸ்லாம், இந்து, பௌத்த, தாவோ, கன்பூசிய, ஷின்டோ, ஜொராஷ்டிரிய, கத்தோலிக்க, கிரேக்க மற்றும் புரோட்டஸ்டன்ட் மதப் பிரதிநிதிகள் அடங்குவர். சுவாமி விவேகானந்தரின் பங்களிப்பு உலகின் சிந்தனைப் போக்கில் ஒரு மாற்றத்தை உண்டு பண்ணியதாக சுவாமி ஆசுதோஷானந்தர் குறிப்பிடுகின்றார். இன்று உலகக் குடும்பம் (Global Family), உலகப் பண்பாடு (Global culture) என்றெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசப்படுவதும், அத்தனைய சிந்தனையை நோக்கி உலகம் சென்று கொண்டிருப்பதும், சுவாமி விவேகானந்தரின் சிந்தனைப் பரிமாணங்கள் என்று கொள்ளலாம்.

இந்துக்களின் சமய நூல் எது என்ற கேள்வியை ஆரம்பத்தில் எழுப்பியிருந்தேன். இதற்கான விடை அவ்வளவு இலகுவானதல்ல. சிந்துவெளி நாகரீகம் பற்றி அறியுமுன்னர், வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், பகவத் கீதை, தேவாரங்கள், ஆழ்வார் பாடல்கள், திருவாசகம், திருப்புகழ் என்று பல நூல்கள் இருந்தன. இவற்றில், வேதம் தவிர்ந்த மற்றவை தமிழர்களின் பக்தி மற்றும் வழிபாட்டு நூல்கள்களாக எப்போதும் இருந்துவந்துள்ளன.

வேத காலத்தில் ஆரியர் பயத்தின் காரணமாக இயற்கை தேவதைகளான இந்திரன், வருணன், அக்னி, வாயு என்று இடி, மழை, தீ, காற்று என்பனவற்றை மனித வடிவில் வழிபட்டனர். வேதங்களில் சிவன் என்னும் பெயர் மிகவும் அரிதாகக் காணப்படுகின்றது. சிவன் என்னும் தமிழர் கடவள் உருத்திரன் என்னும் ஆரிய இடத்தில் வைக்கப் பட்டான். உருத்திரன் இயற்கைக் கூறுகள் பலவற்றுள் புயலுக்குரிய கடவுளாகக் கருதப்பட்டான். ஆரியர் இயற்கை சார்ந்த கடவுள்களையே வேள்விகளில் வழிபட்டனர் என்பது வேத மந்திரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. வேதங்களை வியாச முனிவர் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காக வகுத்துள்ளார். இவற்றில் முதல் வேதமாகிய இருக்கு வேதம் ஓமக்கிரியைகளைப் பற்றியும், இரண்டாவதாகிய யசுர் வேதம் வேள்வி விளக்கத்தைப் பற்றியும், சாம வேதம் இறை வணக்கத்தைப் பற்றியும், நான்காவது வேதமாகிய அதர்வணம் உபாசனை பற்றியும் சொல்லுகின்றன. அதர்வணத்தில், 730 பாட்டுக்களும் 6,000 மந்திரங்களும் உள்ளன. அதர்வண வேதம் இயற்கையால் ஏற்படக்கூடிய அழிவுகளிலிருந்தும் நோய்களிலிருந்தும் தப்புவதற்குச் செய்ய வேண்டிய சடங்குகளைப் பற்றியும், கிரியைகளைப் பற்றியும் சொல்லுகின்றது. உபநிடதங்கள் வேதங்களின் சிகரமாக விளங்குகின்றன என்று சுவாமி விவேகானந்தர் தன் விரிவுரைகளில் விளக்குகின்றார்.

மதத்தில் இடம்பெறும் எல்லாவிதமான வெளிச்சடங்கு களிலிருந்தும் விடுபட்டு, பிரபஞ்சம் பற்றிய உண்மைகள் உபநிடதத்தில் விளக்கப் பட்டிருக்கின்றன. இது பற்றி நான் ஐன்ஸ்டைனின் கண்டு பிடிப்பான $E=MC^2$ உடன் ஒப்பிட்டு முன்னரே எழுதியிருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்துவெளி நாகரீகம் பற்றி அறிந்த பின்னர், யோக நெறி, பசுபதி வழிபாடு, நடன வழிபாடு போன்றன பண்டைய காலத்துத் தமிழர்களின் வழிபாட்டு முறை பற்றி அறியமுடிந்தது. குறிப்பாகச் சிவ தாண்டவம் பற்றியும், நடராஜர் வழிபாட்டிற்கான மூலக் கொள்கைளின் ஆரம்பம் பற்றியும், ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடிந்துள்ளது. "தமிழருக்குச் சமயம் ஏதும் இல்லை. எல்லாம் பிராமணர்களின் சூழ்ச்சி" என்று கூறுவது அறியாமை என்பது அறிஞர் கருத்து. வடக்கிலிருந்து வேதப் பண்பாடு தமிழ் நாட்டிற்குப் பரவியது போல், தெற்கிலிருந்து சிவன மற்றும் திருமால் வழிபாடு வடக்கிற்குப் பரவியுள்ளது.

தமிழ் நாட்டில் மார்கழித் திருவாதிரையில் தரிசனம் தரும் தாண்டவ மூர்த்தியான நடராஜர், வட நாட்டுத் தலங்களிலும் இடம் பெற்றுள்ளார். திருமூலரின் வாக்குப்படி

ஆமே பொன் அம்பலம் அற்புதம் ஆனந்தம்

ஆமே திருக்கூத்து அனவரத தாண்டவம்

ஆமே பிரளயம் ஆகும் அத் தாண்டவம்

ஆமே சங்காரத்து அரும் தாண்டவங்களே

சிந்து வெளித் தமிழர் யோக நிலையிலிருந்த சிவனை வழிபட்டனர். லிங்க வழிபாடும் இருந்துள்ளது. சிவன் யோக மூர்த்தியாக அமர்ந்த நிலையில் இருக்கச் சுற்றிலும் பல விலங்குகள் இருக்கின்ற காட்சியால் சிவன் "பசுபதி" என்னும் பெயரைப் பெற்றான். இந்த யோகியின் தலையில் உள்ள மூன்று கொம்புகள் பிற்காலத்தில் சிவன் கையில் உள்ள சூலமாக மாற்றம் பெற்றிருக்கலாம் என்று சேர் ஜோன் மார்ஷல் (Sir John Marshall-Director-General of the Archaeological Survey of India from 1902 to 1928) கூறுகின்றார்.

கி.பி 5ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் அறிஞர்களிடையே பரவியிருந்தாலும் அவை ஒன்று திரப்பட்ட நூல் வடிவில் இல்லை. சைவ சமயத்தின் அடிப்படை நூல்களாகிய சைவ ஆகமங்களும் மறைக்கப் பட்டிருந்தன. சில வடமொழியில் மொழி பெயர்க்கப் பட்டுச் சிலர் கைகளில் அடங்கிக் கிடந்தன.

இவற்றில் திருமூலர் செய்த திருமந்திரம் சைவ நூல்களில் முன்னோடியாக அமைந்துள்ளது. இந் நூலின் ஒன்பது தந்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிந்து வெளியில் கண்டு பிடிக்கப்பட்ட பசுபதி Seal

முக்கியமாக வாழ்வியல், அறநெறிகளையும் உலகப் படைப்பு தொடர்பான செய்திகளையும், யோகத்தின் வகைகளையும், மந்திரம் சக்கரங்களின் அமைப்பையும், ஆறு ஆதாரங்களை இயக்கி யோகிகள் பெறும் பயன், சிவத்தில் கலப்பதற்குரிய சாதனங்கள் முதலியனவற்றை விளக்குகின்றன.

திருமந்திரங்களில் எனக்குப் பிடித்த சில வரிகள்

பதியினைப் போல் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்
பதியணுகில் பசுபாசம் நிலாவே.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே

பின்னை நின்று என்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக மயல் தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே

பண்டம் பெய்கூரை பழகி விழுந்தக்கால்
உண்ட அப் பெண்டிரும் மக்களும் பின் செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநடவாதே

திருமந்திரம் அருளிய திருமூலர் ஒரு சித்தர் ஆயினும் 63 நாயன்மார்களில் ஒருவராகப் போற்றப் படுகின்றார். இதற்குக் காரணம் அவரின் படைப்பான திருமந்திரம், கடவுளின் பெருமையைக் கூறுவதோடல்லாமல் மனித வாழ்விற்கு இன்றியமையாத உயரிய கருத்துக்களையும் கூறுகின்றது.

நான் இந்தக் கட்டுரை எழுதத் தொடங்கு முன் இந்து சமயத்தைப் பற்றியும், குறிப்பாகத் தமிழர்களின் சமயத்தைப் பற்றியும் ஒரு தெளிவான சிந்தனையற்று இருந்து விட்டேன். தமிழர்களின் சமயம் ஒரு பெரிய சமுத்திரத்தைப் போன்றது என்பதை இப்போது உணர்கின்றேன். அவற்றில் நான் இக் கட்டுரையில் குறிப்பிட்டவை ஒரு சிறு துளி அளவேயாகும். நான் அவற்றை என் சிற்றறிவுக்கு எட்டியபடி விளக்க முயற்சித்துள்ளேன். யோகர் சுவாமியின் அருள் வாக்குப்படி:

**"ஒரு பொல்லாப்பும் இல்லை;**
**எப்பவோ முடிந்த காரியம்."**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காசிக்குப் போகும் சம்சாரி

ஒரு பயணக் கட்டுரை

மு.தயாநிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org